பக்கங்கள்:08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 09 சனிக்கிழமை 22.04.2023 கதிர்163

## மாகாநயக்க தேரர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் உள்ள பொருத்தமற்ற பகுதிகளை நீக்குவிடுமாறு கோரி மாகநாயக்க தேரர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

நான்கு பௌத்த பீடங்களையும் சேர்ந்த மாகாநாயக்கர்கள் கையெழுத்திட்டு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

நாட்டில் தற்போதுள்ள பிரச்சனைகள் மற்றும் பொது நலன்களை மையமாக வைத்து, ஒரு பரந்த சமூக உரையாடலை உருவாக்கி, நிபுணர் குழு மூலம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் உள்ள பொருத்தமற்ற ஷரத்துக்களை நீக்குவது பொருத்தமானது என்று அந்தக் கடிதத்திலல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகள், கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் மக்களின் உரிமை என்பன இல்லாதொழிக்கப்பட்டமைக்கு இலங்கை சமூகத்தில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளமையை மாகாநாயக்கர்கள் சுட்டிக்காட்டி, அதனடிப்படையில் திருத்தங்களைப் பொருத்தமான முறையில் மேற்கொள்ளும்படி வலியுறுத்தியுள்ளனர்.

இந்த கடிதம் அஸ்கிரி, மல்வத்து, அமரபுர மற்றும் ரமண்ய பீடாதிபதிகளினால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள் தொடர்பில்

## சர்வதேச மட்ட விசாரணைகள் தனது ஆட்சியில் என்கிறார் சஜித்

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கள் தொடர்பில் சுயாதீன தேசிய விசாரணைகளுக்கு அப்பால் சுயாதீன சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று அக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச உறுதியளித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று 4 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், விசேட அறிவிப்பொன்றை வெள்ளிக்கிழமை விடுத்தார் சஜித். அந்த அறிவிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏன் இன்னும் நியாயம் வழங்கப்படவில்லை? இந்த தாக்குதல்களின பின்னணியில் இரகசிய நிகழ்ச்சிநிரல் காணப்பட்டது என்றால், அதனை மறைப்பதற்கு எவரேனும் செயற்பட்டுக் ☞2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் மாநகர சபையின் லட்சணம் அனைவரும் அறிந்த விடயம் இனி இதில் எழுதித்தான் அனைவரும் அறிய வேண்டிய தேவைகிடையாது. எப்படி மாகாண சபை செய்ய வேண்டியதை செய்யவில்லை எனப்படுகின்றதோ அதேபோன்று யாழ். மாநகர சபையும் தான் செய்திருக்கக்கூடிய - செய்திருக்கவேண்டிய - பலவற்றைச் செய்யாமல் அரசியல் நடத்தியது என்பதே உண்மை. ஆங்காங்கே யாரிடமாவது பணத்தைப் பெற்று சில பல அபிவிருத்தி வேலைகளைச் செய்து காட்டி அவற்றில் பெயர் பொறிப்பதில் இருந்த கவனம் உண்மையில் செய்யப்பட்டிருக்கவேண்டிய பல விடயங்களில் காட்டப்படவேயில்லை.

ஏன் இவ்வளவு பீடிகை என்றுதானே யோசிக்கிறீர்கள்? விசயம் இருக்கிறது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு 2019ஆம் ஆண்டு யப்பான் தூதரகம் வழங்க முன்வந்த 4 கொம்பக் ☞2

## உணவுப் பணவீக்கம் குறைவடைந்தது

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையில், மார்ச் மாதத்தில் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன அல்லது பணவீக்கம் கணிசமாகக் குறைவடைந்துள்ளது.

பெப்ரவரியில் 53.06 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கம், மார்ச் மாதத்தில் 49.2 சத வீதமாகக் குறைவடைந்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகளின் படி, மார்ச் மாதத்தின் உணவுப் பணவீக்கம் 42.3 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. இருப்பினும், உணவு அல்லாத பணவீக்கம் தொடர்ந்தும் 54.9 சதவீதமாகக் காணப்படுகின்றது.

## நீதிக்காகவே நினைவேந்தல்

பழிவாங்குவதற்காக அல்ல. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே இந்த நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் பேராயர் கலாநிதி பிரையன் உடக்வே தெரிவித்தார்.

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை வாழ் மக்கள் எப்போதும் இவ்வாறான தாக்குதல்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். உயிர் நீத்த மக்களுக்காக இறைவனைத் தொடர்ந்தும் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் எதிர்காலத்தில் இவ்விதமான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை ☞2

# ஆட்சியாளர் மீது இனிமேலும் நம்பிக்கை கொள்ள முடியாது

### கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை காட்டம்

- இந்தியா தகவல் வழங்கியும் தாக்குதலை தடுக்காதது ஏன்?
- விசாரணை அறிக்கையை வெளியிடாது இருப்பது ஏன்?
- சாராவின் டி.என்.ஏ. சோதனைக்கு 3ஆவது தடவை உத்தரவிட்டது யார்?
- மக்களுக்கிடையிலான ஐக்கியத்தை சீர்குலைப்பதற்கு இடமளிக்க முடியாது
- கடன் கிடைத்தமைக்காக பட்டாசு கொளுத்தும் வேடிக்கையான நிலை

**மக்களின் இறைமையை மதிக்காது, அதனை பந்தாடுவதற்கு முயற்சிக்கின்ற தற்போதைய ஆட்சியாளர்களை இனிமேலும் நம்ப முடியாது என்று கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை பகிரங்கமாக அறிவித்துள்ளார்.**

**அத்துடன், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தடுக்கபடாமை, விசாரணை அறிக்கை வெளியிடப்படாமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கேள்விக் கணைகளையும் ஆட்சியாளர்களிடத்தில் தொடுத்தார்.**

**2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் உயிரிழந்த** ☞2

## வழக்குத் தாக்கல்

(ந.லோகதயாளன்).

வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் தொண்டர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நியமனம் நிறுத்தி வைக்கப்பட்டோர் தம்மை பதவியேற்க அனுமதிக்காமைக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக சுகாதார தொண்டர்களாகப் பணியாற்றியவர்களை நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நேரம் பல தடவைகள் பல முரண்படுகள், குளறுபடிகள் இடம்பெற்றதனால் அவை தடைப்பட்டே வந்தன.

இந்த நியமனத்திற்காகப் பல தடவை நேர்முகத் தேர்வும் இடம்பெற்றது. இறுதியில் 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் 300ற்கும் மேற்பட்டோருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அப்போதைய செயலாளரினால் இந்த நியமனக் ☞2

## அனைத்துக் கட்சி ஆட்சியில் மாத்திரமே சு.க. பங்கேற்கும்

### அதன் செயலாளர் தெரிவிப்பு

அனைத்துக்கட்சி ஆட்சி அமைக்கப்பட்டால் மாத்திரமே அதில் நாம் பங்கேற்போம் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான, தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

தேசிய ஆட்சியை அமைப்பதற்கு சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணங்கியுள்ளார் என்று டிலான் பெரேரா வெளியிட்ட தகவல்களை அடுத்து அது தொடர்பில் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய ஆட்சி குறித்து சுதந்திரக் கட்சி எந்தவொரு கலந்துரையாடலையும் நடத்தவில்லை. அதனை நாம் விரும்பவும் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலத்திலேயே சர்வ கட்சி ஆட்சி அமைக்கப்பட வேண்டும் என்ற ☞2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து அமைச்சருக்கே உறுதிப்பாடில்லை

### சாடுகின்றார் பொது ஜன பெரமுன எம்.பி.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்கிய அமைச்சர் விஜயதாசவே அச்சட்டம் சம்பந்தமாக உறுதியான நிலைப்பாட்டில் இல்லை என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் உள்ள அகட்சியின் தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தினை உருவாக்கியவர் அமைச்சர் விஜயதாச. அவர் தான் காலிமுகத்திடலில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்று ஒருகாலத்தில் கூறியவராகவும் இருக்கின்றார்.

அவ்விதமானவர் உருவக்கியுள்ள சட்டமானது தற்போது காணப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை விடவும் மோசமானது என்றால் நாம் நிச்சயமாக எதிர்ப்போம். நாடாளுமன்றத்தில் ☞2

## மட்டக்களப்பிலும் நேற்று நீதி கேட்டுப் போராட்டம்

(பழுவூரான்)

உயிர்த்த ஞாயிறு (ஈஸ்டர்) குண்டு வெடிப்புகளில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் முகமாக மட்டக்களப்பில் சர்வமத ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் நினைவஞ்சலி நிகழ்வும், ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

சாள்ஸ் மண்டபத்தின் வாசலில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம், ஆயர் இல்லத்தின் பிரதான நுழைவாயில் வரை சென்று முடிந்தது.



நீதி கோரிய போராட்டமும் வெள்ளிக்கிழமை சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

உயிர்நீத்த உறவுகளை நினைவுகூரும் முகமாக தீபச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டு, மௌன அஞ்சலியும் இடம்பெற்றது.

மத வழிபாடுகளைத் தொடரர்ந்து நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

பின்னர் குண்டுவெடிப்புகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி, அமைதியான முறையில் பதாகைகளை ஏந்தியவாறு சுமார் 15 நிமிடங்கள் அமைதியான முறையில் அங்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

சர்வ மத தலைவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில்,



சமயத் தலைவர்கள், பல் சமய ஒன்றியத்தின் அங்கத்தவர்கள், மட்டக்களப்பு வாழ் இளைஞர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

உயிர்த்த ஞாயிறு படுகொலைகளுக்கான

## நீதி நிலைநாட்டப்படுவதற்கு இராஜதந்திரிகள் முழு ஆதரவு

உயிர்த்த ஞாயிறு சம்பவத்தில் நீதிக்காக காத்திருப்பவர்களுக்கு முழு ஆதரவு வழங்குவதோடு, பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டுச்செயற்பாடும் அவசியம் என்று இலங்கைக்கான இராஜாதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் இது தொடர்பில் குறிப்பி ☞2



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில்

## திருத்தங்களை முன்வைத்தால் அவற்றைப் பரிசீலிக்கத் தயார்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் திருத்தங்களை முன்வைத்தால் அவற்றைப் பரிசீலிப்பதற்கு எமது ஆட்சி தயாராகவே இருக்கின்றது, சட்டமூலம் குறித்து விமர்சிப்பவர்கள் அதற்கான திருத்தங்கள் எவற்றையும் முன்வைத்ததில்லை என்று நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி, மல்வத்து பீடாதிபதி சுமங்கல மகாநாயக்கதேரர், அஸ்கிரிய பீடாதிபதி மகாநாயக்க வரகாகொட தம்மசித்தி தேரர், லங்காராமஞான மகாநிகாய, கட்டம்பே ஸ்ரீ ராஜோபவனாராமதிப கப்பெட்டியாகொட சிறிவிமல நாயக்க தேரர் ஆகியோரை நேற்றைய தினம் தனித்தனியாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, மற்றும் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன ஆகியோர் சந்தித்திருந்தனர்.

இச்சந்திப்பின்போது, தேரர்கள், புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தினை மறுசீரமைக்க முடியாதா? அச்சட்டம் நடைமுறைக்கு வந்தால் எழுதமுடியாது, கதைக்கமுடியாது உள்ளிட்ட அச்சமான நிலைமைகள் காணப்படுகின்றன. இந்தச் சட்டத்தினை வரைந்துள்ள நீங்கள் சிறந்த சட்ட அறிஞர் என்றவகையில் இந்தச்சட்டம் பிற்காலத்தில் உங்களையும் பாதிக்கும் அல்லவா என்ற கேள்விகளைத் தொடுத்தனர்.

கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர் விஜயதாச, இந்தச்சட்டத்தின் திருத்தங்கள் செய்யவேண்டுமாக இருந்தால் அவற்றைக் குறிப்பிட்டு திருத்தங்களை யோசனைகளை வழங்க முடியும். தற்போது வரையில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்ற எந்தத் தரப்பினரும் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்களை யாழ். மாநகர சபை தன்னுடைய 'திறமையால்' வாங்காமல் விட்டது. யப்பான்காரர்கள் வாகனத்தையும் கொடுத்து அதனை இறக்குமதி செய்வதற்கான வரி உள்ளிட்ட செலவுகளுக்கான காசையும் கொடுத்து உதவி செய்தபோதும், அந்த வாகனங்களை இறக்குமதி செய்ய மத்திய அரசு விடுகுதில்லை என்று காரணம் சொல்லிக்கொண்டு, கடைசியில் யப்பான் அரசு கொடுத்த காசையும் திருப்பிக்கொடுத்தது மாநகர சபை.

மாநகர சபை என்றால், சபையின் மக்கள் பிரதிநிதிகளலல்லர். முன்னாள் முதல்வர் மணிவண்ணனும் மாநகரசபை ஆணையாளரும் மற்றைய அதிகாரிகளும் இணைந்துதான் இந்த மிக மோசமான செயற்பாட்டை மேற்கொண்டாரகள். இவர்கள் எழுதிய ஒரு கடிதம்தான் எல்லாவற்றையும் போட்டுடைத்து அந்த வாகனங்கள் மாநகர சபைக்குக் கிடைக்காமல் போனமைக்கான காரணம். கடைசியில் இந்த விவகாரம் தெரியவந்து, வாகனங்களிற்குச் செலுத்துவதற்கான தீர்வைக்குரிய பணம் உள்ளிட்ட ஒரு கோடியே 43 லட்சத்து 29 ஆயிரத்து 446 ரூபா அல்லது 83 ஆயிரத்து 432 அமெரிக்க டொலரையும் யப்பான் தூதரகத்திற்குத் திருப்பிச் செலுத்தவேண்டாம் என்று சபையில் உறுப்பினர்கள் கொதித்தெழுந்தபோது, அப்படியெல்லாம் செய்ய முடியாது அந்தப் பணத்தைத் திருப்பிச் செலுத்தியேயாகவேண்டும், வாகனங்களை இறக்குமதி செய்ய முடியவில்லை என்று மணிவண்ணன் காலத்து மூடு மந்திர மாநகர சபை நிர்வாகம் உறுப்பினர்களை ஏமாற்றிவிட்டது.

வாகனங்களை இறக்க முடியாமைக்கு நிதி அமைச்சு, திறைசேரிகளின் அசமந்தப் பதிலும், இழுத்தடிப்புமே காரணம் என்றும் வாகனங்களை இறககுமதி செய்வதற்கான உரிய அனுமதிகளைப் பெறமுடியவில்லை என்றுகூறி அந்த விடயத்தை அப்போதே முடித்துவிட்டனர். இப்படி யாழ்ப்பாணம் மாநகர சபையால் முடியாமல் போன - சட்டத்தரணி முதல்வரையும் இரண்டு மூன்று இலங்கை நிர்வாக சேவையின் மூத்த தர நிலை அதிகாரிகளையும், மேலும் பல அதிகாரிகள் உட்பட கிட்டத்தட்ட ஆயிரம் பணியாளர்களையும் கொண்ட ஒரு சபையால் முடியாமல் போன - விடயத்தை ஒரு சிறு கூட்டுறவு வைத்தியசாலையால் சாதிக்க முடிந்திருக்கிறது. யாழ். மாநகர சபைக்கு இது எவ்வளவு பெரிய கேவலம்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு வாகனங்களைக் கொடுக்க யப்பான் முன்வந்த இரண்டு வருடங்கள் கழித்து மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு - 2021ஆம் ஆண்டு - இரு வாகனங்களை, 38 ஆயிரத்து 198 அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனங்களை, வழங்க யப்பான் தூதரகம் ஒப்பந்தம் எழுதியது. அதற்கான தீர்வைக்காக 6 மில்லியன் ரூபா பணத்தையும் வழங்கியது. யாழ். மாநகர சபையினை ஒத்த அதே நடைமுறைகளின் கீழ்தான் இந்த வாகனங்களை மூளாய் வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு யப்பான் இணங்கியிருந்தது. இன்று இரண்டு வருடங்களுக்குள் அந்த இரு வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட்டு மூளாய்க்கு வந்து சேர்ந்துவிட்டன. இத்தனை அதிகாரிகள், பணியாளர்கள், கற்றறிந்த நண்பர்கள் இருந்தும் யாழ். மாநகர சபையால் முடியாமல் போனதை அதில் கால்வாசிகூட ஆளணியைக் கொண்டிராத மூளாய் வைத்தியசாலை சாதித்துக் காட்டியிருக்கிறது.

இதற்காக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் தலைவரான நித்தியானந்த மனுநீதி பாராட்டப்படவேண்டியவர். மதிக்கப்படவேண்டியவர். அவரைப்போன்றவர்கள்தான் தமிழர்களின் தலைவர்களாக வரவேண்டியவர்கள். ஏனெனில் அவரது இடைவிடாத நீண்டகால முயற்சியினால்தானன் அந்த இரு வாகனங்களும் இன்று மூளாய் மக்களின் பயன்பாட்டுக்காகக் கிடைத்திருக்கின்றன. நோயாளர் காவு வண்டி மற்றும் ஓர் நடமாடும் வைத்தியசேவை வழங்கும் வசதிகொண்டதான வாகனம் என்பன 2023-04-19 அன்று மூளாய்க்கு வந்து சேர்ந்திருக்கின்றன. .

அரச அதிகாரிகள், சட்டத்தரணிகளில் பெற முடியாமல்போன அத்தனை அனுமதிகளையும் பெற்று அந்தவாகனங்களைகொண்டு வந்த மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் நிர்வாகம் ஓர் விணைத்திறன் கொண்ட நிர்வாகமே. மக்கள் சேவையை எப்படி யாற்ற வேண்டும் என்பதை அதிகாரிகளும் கற்றறிந்தவர்களும் உண்மையில் மூளாய் சென்று கற்றுக் கொள்ள வேண்டும்.

**இடமின்னல்**

## ஆட்சியாளர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கான ஆன்ம இளைப்பாற்று நான்காம் ஆண்டு நினைவு நிகழ்வு வெள்ளிக்கிழமை கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றிருந்தது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வை தலைமையேற்று நடத்திய பேராயர், ஆராதனைகளிலும் பங்கேற்றார். அதன் பின்னர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றியபோது மேலும் தெரிவித்தாவது,

நான்கு வருடங்களுக்கு முன்னதாக இதே நாளில், கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயம், கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் ஆகியவற்றில் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழாவில் கலந்து கொள்ள வந்தவர்களும் கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல்களில் உணவருந்துவதற்காக வந்திருந்தவர்களும் மற்றும் அங்கு தொழில் புரிந்தவர்களும் என்று 272 பேர் கொல்லப்பட்டனர், 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பலரும் இன்னமும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். தாய், தந்தை, உடன் பிறப்புகள் மற்றும் உறவினர்கள் உயிரிழந்தமையால் அவர்களின்றி தவிப்பில் உள்ளவர்களும் காணப்படுகின்றனர். இவ்விதமாகவுள்ள அனைவருக்கும் ஆறுதல் கிடைக்க வேண்டுமெனவும் காயமடைந்தவர்கள் விரைவாக சுகமடையவேண்டுமெனவும் நான் கடவுளிடம் மன்றாடுகின்றேன்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல்சம்பவத்தின் ஊடாக இந்நாட்டின் மக்கள் அனைவரும் ஒற்றுமை அடைந்துள்ளனர். நாட்டுமக்கள் மத்தியில் தனித்துவமான சிறந்த சிந்தனையொன்று தோற்றம் பெற்றுள்ளது. இதன் பயனாக அரசியல் தேவைகளுக்காக நாட்டில் இன முறுகல்களையும், குரோதங்களையும் உருவாக்கி தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு முயற்சிக்கின்ற அரசியல்வாதிகளின் எண்ணங்களும், செயல்பாடுகளும் தோற்கடிக்கப்பட்டுள்ளன. எனினும், உயிர்த ஞாயிறு தினக் குண்டு தாக்குதல்கள் இடம்பெற்று நான்கு ஆண்டுகளாகின்றன. இன்னமும் பதிலகள் வழங்கப்படாத பல கேள்விகள் காணப்படுகின்றன.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டுத்தாக்குல்கள் நடத்தப்படப் போவதாக இந்திய புலனாய்வுத்துறையினரால் இலங்கை பாதுகாப்புப் பிரிவினருக்கு நான்கு சந்தர்ப்பங்களில் முன்னறிவித்தல்கள் விடுக்கப்பட்டபோதிலும், அதனை தடுப்பதற்கு எவ்விதமான முயற்சிகளும் எடுக்காதது ஏன்?

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் முழுமையான அறிக்கையை இதுவரையில் பொதுமக்களின் பார்வைக்கு வழங்காதுள்ளனர். அவ்வாறு அதனை வெளியிடாமல் இருப்பது, தங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்ற காரணத்தினாலாகும் என்பதே எமது நிலைப்பாடாகும். குறைந்தபட்சம் அதிலுள்ள பரிந்துரைகளைக்கூட செயற்படுத்தாது உள்ளமையானது, மிக மோசமான செயற்பாடாகும். பாதிக்கப்பட்டவர்கள் பற்றி கரிசனை கொள்ளப்படாத நிலைமையாகும்.

தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களமும் பொலிஸாரும் தயக்கம் காட்டி வருவதும், ஆனால் பொது வெளியில் பகிரங்கமாக முதலைக் கண்ணீர் சிந்துவதும் நேர்மையான நடவடிக்கை எடுக்க இந்த ஆட்சி தயங்குவதும் வேதனையளிக்கிறது.

கட்டுவப்பிட்டிய தேவாலய குண்டை வெடிக்க வைத்தவரின் மனைவியும் சாய்ந்தமருது குண்டு வெடிப்புடன் தொடர்புடையவருமான சாரா ஜெஸ்மின் எனும் புலஸ்தினி ராஜேந்திரன் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்தார் என்று கூறப்பட்டுவந்த நிலையில், அவரின் டி.என்.ஏ. பரிசோதனையை மூன்றாவது தடவையாக நடத்துவதற்கு உத்தரவிட்டது யார்?.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த கொடூரத் தாக்குதலால் உயிர்களும் உடைமைகளும் அழிக்கப்பட்டு, நாட்டின் முன்னேற்றத்தில் பேரழிவை ஏற்பட்டது. இதனால் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியடைந்தது. பொருளாதாரச் சீர்குலைவிற்கும் அந்த தாக்குதலே வழிகோலியது. அவ்வாறான நிலையில் தற்போது பொருளாதார சீர்குலைவிலிருந்து மீள்வதற்காக கடன்களைப் பெற்றுவிட்டு அதனை வெடிகொளுத்திக் கொண்டாடும் வேடிக்கையான நிலைமையே இங்கு காணப்படுகின்றது.

அரசதரப்பின் வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும் இடையிலான இடைவெளி தெளிவாகப் புலப்படுகிறது. அண்மையில் கத்தோலிக்க திருச்சபையுடன் நேர்மையான பேச்சுக்கு தயார் என்று அறிவித்த தற்போதைய ஜனாதிபதியும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் இரட்டைக் கொள்கையை கடைப்பிடிக்கின்றார்களா என்ற கேள்வி எமக்குள்ளது.

மக்களின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் மனித மேன்மையையும் அழித்து, ஏகாதிபத்தியத்துடன் மக்களின் இறையாண்மையை எட்டி உதைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாட்டின் தலைமையின் மீது நம்பிக்கை கொள்ள முடியாதுள்ளது.

அதேநேரம் இந்த நாட்டில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அந்த மதத்தின் கோட்பாடுகளுக்கு எதிராகச் செயற்படுபவர்களை அனுமதிக்க முடியாது. அத்துடன், பௌத்த தேரர்களை சமூக ஊடகங்கள் ஊடாக விமர்சிக்கும் செயற்பாட்டையும் முன்னெடுப்பதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## திருத்தங்களை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு யோசனைகளை வழங்கவில்லை. கருஜய சூரியவின் அமைப்பினர் மட்டும்தான் பந்துரைகளை வழங்கியுள்ளனர்.

மேலும், தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தினை விடவும் புதிய சட்டமானதுமென்மையானது. அதன்மீதுகுற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளை மறந்துவிட்டனர். அதுமட்டுமன்றி, தற்போதைய வரைவினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை. அதன்பின்னர் உயர் நீதிமன்றத்தினதும், ஏனையவாகளினதும் பரிந்துரைகளுக்கு அமைவாக திருத்தங்களை மேற்கொள்வதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்றபோது ஜனநாயகத்தினைப் பாதுகாப்பதற்கு பயங்கரவாதச் சட்டம் அவசியம் என்றார்கள். தற்போது அவர்களை காணக் கிடைக்கவில்லை என்று தேரர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் தெரிவித்ததாவது:

அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், இந்தியா போன்ற நாடுகளில் எமது நாட்டிலும் பார்க்க மிகவும் வலுவான பயங்கரவாத தடுப்புச் சட்டம் இருந்துவருகிறது. என்றாலும், சில வெளிநாடுகள் மனித உரிமையை பாதுகாக்கும் முறையையும் மற்றும் அவர்கள் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தைக் கையாளும் முறையையும் எமக்குக் கற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகளின் அடிப்படையில் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஊடாக தொழிற் சங்கங்களின் உரிமைகள், ஊடக உரிமைகள், போராட்டங்கள் போன்றவை அடக்கப்படுவதாக தெரிவித்து, சிலர் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

புதிய சட்டமூலம் தொடர்பாக விமர்சிப்பவர்கள், அதில் உள்ளடக்கப்படவேண்டிய திருத்தங்கள் தொடர்பில் எந்தக் கருத்தையும் முன்வைப்பதில்லை. அத்துடன், உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை முன்வைப்பதன் பிரதான நோக்கமாக இருப்பது, மக்களின் வாழ்க்கை, சொத்துக்களின் உரிமை மற்றும் நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு, இறையாண்மையை பாதுகாப்பதற்காகும்.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற வெளிநாடுகளில் திட்டமிடப்பட்ட குற்றங்களை மேற்கொள்ளல் மற்றும் கூட்டுப் பாலியல் முறைகேடுகளுக்காவும் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படுகிறது. மேலும், தடுப்புக்காவல் உத்தரவு தொடர்பாக பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் நீதவானுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரம் தொடர்பில் இணங்க முடியாது என்றால் அந்த அதிகாரங்களை பாதுகாப்பு அமைச்சருக்கு உரித்தாக்க முடியும்.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற உலகின் பலம் வாய்ந்த நாடுகளில் இருந்துவரும் பயங்கரவாதத்தை தடுக்கும் வலுவான சட்ட திட்டங்கள் தொடர்பாக விமர்சிக்காத கிஷ்மா அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகள், நம்மைபோன்ற சிறிய நாடுகள் கொண்டு வரும் இத்தகைய சட்டங்களை விமர்சிப்பது கவலைக்குரிய விடயமாகும்.

பல்வேறு தரப்பினரும் பலவழிகளில் நாட்டை அழிக்க முயற்சிக்கின்றனர். அதற்கான எந்தச் சந்தர்ப்பத்தையும் வழங்கப்போவதில்லை. இனங்களுக்கிடையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே தேவையாக இருக்கிறது. அதேபோன்று மகாநாயக்க தேரர்கள் உட்பட அனைவரதும் கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளும் கருத்தில் கொள்ளப்பட்டு புதிய பயங்கரவாத சட்டமூலத்துக்கான திருத்தங்களை உள்ளடக்குவதற்கு எமது ஆட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது - என்றார்.

## பயங்கரவாத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மையைக் கொண்டுள்ள கட்சி என்ற அடிப்படையில் எமக்கு அந்த சக்தி உள்ளது.

அதேநேரம், அமைச்சர் விஜயதாச தான் உருவாக்கிய சட்டம் சம்பந்தமாக உறுதியான நிலைப்பாட்டில் இல்லை. சிவில் அமைப்புக்களின் சந்திப்பில் ஒன்றைக் கூறுகின்றார். மகாநாயக்க தேரர்களின் சந்திப்பில் இன்னொன்றைக் கூறுகின்றார். ஆனாலும் இந்த விடயத்தில் நாம் சரியான முடிவினை எடுப்போம் - என்றார்.

## அனைத்துக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாட்டை சுதந்திர கட்சி கொண்டிருந்தது. தற்போதும் அதே நிலைப்பாட்டில் தான் காணப்படுகிறது. எனினும் அவ்வாறானதொரு ஆட்சியை அமைப்பதற்கு எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆகவே தான் நாம் அனைத்துக் கட்சி ஆட்சியை வலியுறுத்துகின்றோம். குறுகிய காலத்திற்காகவது அனைத்து கட்சிகளும் கொள்கை ரீதியில் ஒன்றிணைந்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முன்வரவேண்டும்.

அதனையடுத்து தேர்தல் ஊடாக எவருக்கும் ஆட்சியமைப்பதற்கும், பதவிகளை ஏற்பதற்கும் வாய்ப்புக்கள் உருவாகும். வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்பத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கும் எமது கட்சி தயாராகவே உள்ளது

அனைத்து கட்சிகளினதும் பங்கேற்புடன் சிறிய அமைச்சரவையைக் கொண்ட அனைத்துக் கட்சி ஆட்சி அமைக்கப்படவேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம். மாறாக, தேசிய ஆட்சியை அமைத்து அமைச்சரவை எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பதற்கும் பதவிகளைப் பெறுவதற்கும் துணைபோக முடியாது - என்றார்.

அமைச்சுப்பதவிகளுக்காக அன்றி நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் தயாராக உள்ளனர் என்றால், முறையான வேலைத்திட்டத்துடன் 10 ஆண்டுகளுக்குள் நாட்டைக் கட்டியெழுப்பமுடியும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நீதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுகையில், "நான்கு வருடங்களுக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்ட 5 அமெரிக்கர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோரை இன்றைய தினத்தில் நினைவு கூருகின்றேன். அத்தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் அதேவேளை, நீதிக்காகக் காத்திருப்போருடன் சேர்ந்து நிற்கின்றோம்'' என்று தெரிவித்துள்ளார்.

6 சீனர்கள் உள்ளடங்கலாக உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்களில் கொல்லப்பட்டோரையும், பாதிக்கப்பட்ட தரப்பினரையும், அவர்களின் குடும்பங்களையும் நினைவுகூர்ந்திருக்கும் இலங்கைக்கான சீனத்தூதுவர் குய் சென்ஹாங், "நாம் அனைவரும் கூட்டிணைந்து எந்தவொரு வடிவத்திலான பயங்கரவாத செயற்பாடுகளையும் தோற்கடிப்பதுடன் பூகோளப் பாதுகாப்பு செயற்திட்டத்தின்கீழ் பாதுகாப்பானதொரு உலகத்தைக்கட்டியெழுப்பவேண்டும்" என்று கோரியுள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஷாரா ஹல்டன், ''இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் இடம்பெற்று 4 வருடங்கள் கடந்துள்ள நிலையில், நாம் பாதிக்கப்பட்ட தரப்பினரையும், அவர்களின் அன்புக்குரியவர்களையும், இன்னமும் நீதியைக் கோருபவர்களையும் நினைவுகூருகின்றோம்'' என்று கூறியுள்ளார்.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் வெஸ்லி ஸ்டீபன்ஸ் மற்றும், நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் மிஷெல் எப்பல்டொன் ஆகியோரும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களையும், பாதிக்கப்பட்ட தரப்பினரையும் நினைவுகூர்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நேற்றையதினம், கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வில் இவர்கள் பங்கேற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நீதிக்காகவே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் உறுதிசெய்யவேண்டும்.

அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதியான பராக் ஒபாமா, பயங்கரவாதத்திற்கு மதம் காரணமல்ல. வன்முறைக்கும், பயங்கரவாதத்திற்கும் மக்களே பொறுப்புக்கூற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட அனைத்து இலங்கை மக்களுக்கும் பரிசுத்த பாப்பரசரின் ஆசிகளை வழங்குகின்றேன் - என்றார்.

## சர்வதேச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கின்றனரா? இதில் உண்மையைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகளை ஏன் எவராலும் முறையாக முன்னெடுக்க முடியாதுள்ளது?

இந்த விவகாரத்தில் உண்மைகளைக் கண்டறிவதில் பல்வேறு தலையீடுகள் காணப்படுகின்றன. எமது ஆட்சியில் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்.

சுயாதீன தேசிய விசாரணைகளுக்கு மேலதிகமாக சுயாதீன சர்வதேச விசாரணைகளும் முன்னெடுக்கப்படும். எப்.பி.ஐ., ஸ்கொட்லன்யாட் உள்ளிட்டவற்றுடன் இணைந்து சர்வதேச மட்டத்தில் கூட்டு விசாரணைகள் நடத்தப்படும்.

இதனுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதில் நாம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை. விசாரணைகள் தொடர்பில் முன்வைக்கப்படும் முரண்பட்ட கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவையாக இல்லை.

ஆகவே எமது ஆட்சியில் மேற்படி விடயங்களை முன்னெடுக்கப்படுவது உறுதியென்று பேராயர் உள்ளிட்ட சகல கத்தோலிக்க மக்களிடமும் தெரிவிப்பதோடு எமது ஆட்சியில் நீதி நிலைநாட்டப்படும் - என்றுள்ளார்.

## வழக்குத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதங்கள் வழங்கப்பட்டன.

நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்ட பலர் எந்தக் காலத்திலும் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியவர்களில்லை என்கிற குற்றச்சாட்டை அடுத்து அந்த நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டன. நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டவர்கள் பதவியேற்க அனுமதிக்கப்படவவில்லை.

தவறுகளைத் திருத்துவதற்காக மீண்டும் நேர்முகத் தேர்வு இடம்பெற்றபோதும் அதன் பின்பு எவருக்கும் நியமனம் வழங்கப்படவில்லை.

இந்தநிலையில் நியமனக் கடிதம் வழங்கப்பட்டோர் தமக்கான பணியை வழங்குமாறுகோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கில. பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டவர்களிற்கு அதற்கான அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது







# வடக்கு கிழக்கு தழுவிய கடையடைப்புப் போராட்டம்; ஒற்றையாட்சிக்கும் 13இற்கு எதிராகவும் அமையட்டும்

## அருட்தந்தை மா.சத்திவேல் கருத்து

வடக்குகிழக்குதழுவிய கடையடைப்பு போராட்டம் ஒற்றையாட்சிக்கும் 13 இற்குத் எதிராகவும் அமையட்டும் என அரசியல் கைதிகளை விடுதலை



செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

எதிர்வரும்நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பயங்கரவாத தடை சட்டத்தின் மூலத்திலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது.

இது ஜனநாயக விழுமியங்களைஅழித்தொழிக்கும் நச்சு சட்டமூலமாகும். தனி மனித மற்றும் சமூகத்தினதும் உரிமைகளை அரசுபயங்கரவாதஇயந்திரங்களான பொலிஸ் மற்றும் படைகளின்சப்பாத்தின்கீழே வைத்துதுவம்சம்செய்யவே வழிவகுக்கும்.

மனிதனை மனிதனாக ஏற்றுக் கொள்ளாது நடமாடித் திரியும் ஜடமாக வைக்கவே பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடை சட்டத்தின்கொடுமைகளைக் கடந்த 44 ஆண்டுகளாக அனுபவிக்கும் மக்கள் சமூகமாக இப்போது புதிய சட்டமூலத்தைஎதிர்க்கவேண்டுமென அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கோருவதோடு வடக்கு கிழக்கில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடக்கவிருக்கும் கடையடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் காரண மாகத் தமிழர்களாகிய நாம் அரசியல் அழிவைச் சந்தித்துள்ளதோடு குடும்ப உறவுகளையும், சமூக உறவுகளையும் காவு கொடுத்திருக்கின் றோம்.

சமூகமாக சிதறுண்டு போயிருக்கின்றோம். பல நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் வாழ்விழந்துள்ளனர். இன்னும் பலர் இன்றும் சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களின் விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் நிலை யிலேயே நாட்டை திறந்த வெளி சிறைக்குள் வைக்கும்பயங்கரவாதஎதிர்ப்பு சட்டமூலம் கொண்டுவரப்பட இருக்கின்றது.

இது கொடூர முகத்தோடு தனது கோரப்பற்களைக் காட்டும் என்பது உண்மை. இதனை ஏற்றுக்கொள்வது சமூகதற்கொலைக்கு விட்டுச் செல்லும் எனலாம்.

மக்களின் பாதுகாப்பு எனும் மாய்மாலத்தோடு கொண்டு வரப்படும் இந்தச் சட்டம் மூலம் இதுவரை காலமும் நாட்டை கொள்ளையடித்து பொருளாதார வறுமைக்குள் தள்ளியவர்களையும், யுத்த குற்றவாளிகளையும் பாதுகாப்பதற்கான முன் ஏற்பாடு என்பதோடு இந்தச் சட்டம் மூலத்தை நடைமுறைப் படுத்துவதன் மூலம் தனது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும், ஆட்சியைத் தொடரவும் ஜனாதிபதி முயற்சிப்பதை நாம் உணரலாம்.

அதுமட்டுமல்ல, நாட்டின் வளங்கள் ஏற்கனவே வெளி சக்திகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் கொடுப்பதற்கானதிட்டங்களே உள்ளன. தற்போதைய நாட்டின்வங்குரோத்து நிலை மேலும் தொடர்வதற்கான வாய்ப்புகளே உள்ளன.

இவற்றுக்கு எதிரான மக்கள் எழுச்சியை அடக்கவும், அனைத்துவகையானசெயற்பாட்டாளர்களையும் அசைவற்றவர்களாக்கி அரசாங்கத்தைப் பாதுகாக்கவுமே திட்டமிடுகின்றனர்.

இந்தச் சட்ட மூலம் அமுலாக் கப்பட்டால் தற்போதுவடக்குகிழக்கில்நடக்கும் காணி சுவீகரிப்புக்கு எதிரான போராட்டம், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம், தொல்லியல் திணைக்களத்துக்கு எதிரான போராட்டம், பௌத்த மயமாக்களுக்கு எதிரான போராட்டம் என அனைத்தையும் பயங்கரவாதமாக்க முடியும்.

இதனை விட முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் பிரதேசத்தை மக்கள் கூடுவதற்குத் தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்கவும் முடியும். மாவீரர் துயிலுமில்ல பிரதேசங்களையும் தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்க முடியும்.

முள்ளிவாய்க்கால்நினைவேந்தல் மற்றும் மாவீரர் நினைவுநாள் சம்பந்தமாகச் செயற்படுகின்றவர்களைப் பயங்கரவாதிகளாக்கி சிறைக்கும் தள்ள முடியும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்பு தோன்றியிருக்கும்நிலையில் 44 வருட காலமாகப் பயங்கரவாதத் தடை சட்டத்தால் அழிவுகளைச் சந்தித்த அனுபவம் கொண்டவர்களாக எந்த வகையிலும்புதியசட்டமூலம் நடைமுறைக்கு வரக்கூடாது என்பதிலே உறுதி கொண்டு அதனை எதிர்ப்பதற்கான தார்மீக பொறுப்பும் எமக்கு உள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். அத்தோடு புதிதாக முன் வைக்கப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமும் எத்தகைய திருத்தங்களுடன் நாடாளுமன்றத்துக்கு வரக்கூடாது.

அவ்வாறு நாடாளுமன்றத்துக்கு வந்தால் அதனை ஆதரிப்பவர்கள் மக்கள் துரோகிகள் தேசத் துரோகிகள் என்றே அடையாளப்படுத்தப்படுவார்கள்.

அதேநேரம் விசேடமாக 25ஆம்திகதிநடத்தவிருக்கும் வடக்குகிழக்குதழுவிய கடை அடைப்பு போராட்டம் நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் அமைவதால் அரசாங்கம் ஒற்றையாட்சிஅதிகாரத்தோடு இந்தியாவுடன் இணைந்து தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வாகத் திணிக்க முயலும் 13 ஆம் திருத்தத்தை எதிர்ப்பதாகவும் போராட்டத்தை நடத்த வேண்டும்.

அதுவே இந்திய, இலங்கை அரசியலுக்கு மட்டுமல்லசர்வதேசத்துக்கும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கும் தெற்கின் மக்களுக்கும் செய்தியாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பலகோடி ரூபா பெறுமதியான திமிங்கல வாந்தி கொழும்பு புறநகரில் சோதனையில் சிக்கியது

ஐந்து கோடிக்கும் அதிக பெறுமதி கொண்ட திமிங்கில அம்பர் எனப்படும் திமிங்கல வாந்தியை வைத்திருந்த நபரொருவர் கொழும்பின் புறநகர் பகுதியான, நியதகல - பன்னிபிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபரை வியாழக்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது சந்தேகநபரிடம் இருந்து 14.3 கிலோ கிராம் எடையுடைய அம்பர் மீட்கப்பட்டுள்ளது.



சம்பவம்தொடர்பில்கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மீகொடபிரதேசத்தில்வசிக்கும் 31 வயதுடையவர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

திமிங்கலவாந்தி,உலகின் மிகவிலையுயர்ந்தவாசனை திரவியத்தை தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாணவிகளுக்குத் தொந்தரவு பொலிஸ் விசாரணை ஆரம்பம்

உடுவில் பெண்கள் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் மாணவிகளிடம் தவறாக நடந்து கொண்டார் என்று செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். பாடசாலையில் உயர்தர வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர், மாணவிகளுடன் இரட்டை அர்த்த வசனங்கள் பேசினார் என்றும் பாலியல் ரீதியான சேட்டைகளில்ஈடுபட்டார்என்றும்பொலிஸாரிடம்முறையிடப்பட்டுள்ளது.

ஆசிரியரின்செயல்தொடர்பில் அதிபரிடம் முறையிட்ட போதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அதனால் தமது மகளை வேறு பாடசாலைக்கு மாற்றி விட்டோம் என்றும் பெற்றோர் தெரிவித்தனர்.

இந்த முறைப்பாடு தொடர்பில், மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.. பிராந்திய அலுவலகமும் கவனம் செலுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. .

# மத்திய வங்கியில் 50 லட்சம் ரூபா மாயம்; பொலிஸ் விசாரணைக்கு ஒத்துழைப்பு!

வங்கியின் பெட்டகத்தில் இருந்து50லட்சம்ரூபா(5000 ரூபா நாணயக்கட்டுகள்) குறைவடைந்தமைதொடர்பில் பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகளுக்குதொடர்ந்து முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்எனஇலங்கை மத்திய வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

2023.04.11 ஆம் திகதி நாணயச் செயற்பாடுகளின் போது, இலங்கை மத்திய வங்கியின் பெட்டகத்தில் இருந்து 50 லட்சம் ரூபா (5000 ரூபாநாணயகட்டுகள்) குறைவடைந்தமை கண்டறியப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் மத்திய வங்கியின் உள்ளக ஆய்வுகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

அதனை தொடர்ந்து கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டது. பொலிஸ் விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த விடயத்தை முழுமையாக விசாரணை செய்வதற்கும், உள்ளக கட்டுப்பாடுகள், செயன்முறைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளைவலுப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸார் முன்னெடுக்கும் விசாரணைகளுக்கு மத்திய வங்கி தொடர்ந்து முழுமையானஒத்துழைப்பை வழங்கும். - என்றுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்று பூமி தினம்.

இந்தப் புவி வாழ் அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்த்துக்கள். மனிதனின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக இன்னும் எத்தனை காலத்திற்கு இந்தப் பூமியில் உயிர்களால் தாக்குப் பிடிக்க முடியுமோ தெரியாது என்பதால் இப்போதே வாழ்த்துக்களைச் சொல்லிக்கொள்வது முக்கியம்.

அப்படிச் சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கின்றது. மனிதச் செயற்பாடுகளின் காரணமாக ஏற்படும் காலநிலை மாற்றம் காரணமாக தாய்லாந்தில் இந்த வாரம் அதி உயர் வெப்பநிலை பதிவாகியுள்ளது. 45.4 பாகை செல்சியஸ் வெப்பம். இந்தியாவில் வெப்ப அலைகளால் இதுவரையில் 13 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

காலநிலைஅறிவியலாளர்களின்புதியஆய்வுமுடிவுகளின்படி உலகம் 2023 அல்லது 2024இல் அதி உயர் சராசரி வெப்பநிலையைப் பதிவு செய்யும். எல்நினோ திரும்புவதால் ஏற்படும் மாற்றம் இது என்கிறார்கள் அவர்கள்.

இந்த நிலையில்தான் இன்று பூமி தினத்தை எதிர்கொள்கின்றோம். பூமி தினம் அல்லது புவி நாள் (சிழிஷமிஜூ ம்ழிதீ) என்பது ஆண்டுதோறும் சித்திரை 22 அன்று புவியின் சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அச்சூழல் மாசடைவதைத் தடுக்கும் நோக்கோடு கடைப்பிடிக்கப்படுகிறது. அனைத்து நாடுகளிலும் 1970ஆம் ஆண்டு முதல் இந்த நாள் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

1969ஆம் ஆண்டு அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் யுனெஸ்கோ மாநாடு ஒன்று நிகழ்ந்தது. அதில் கலந்துகொண்டவர்களுள் ஒருவர் ஜான் மெக்கானெல் (மூலிஜூஜ னிஉளீலிஜஜளயியி). அவர் உலக அமைதிக்காகக் குரல்கொடுத்த ஒரு மாமனிதர். மனிதரும் பிற உயிரினங்களும் வாழ்கின்ற பூமியின் அழகைச் சிறப்பிக்கவும், பூமியின் இயற்கைச் சூழலைக் குலைத்து மாசுபடுத்தாமல் காக்கவும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தேவை என்று அவர் வலியுறுத்தினார்.

அதோடு, ஆண்டுதோறும் புவி நாள் என்றொரு நாளைக் கொண்டாடுவது பொருத்தம் என்றும் மெக்கானெல் கருத்துத் தெரிவித்தார். இவ்வாறுதான் புவி நாள் என்னும் பெயரும் கருத்தும் எழுந்ததாகக் கருதப்படுகிறது.

அதே சமயத்தில், ஐக்கிய அமெரிக்காவில் சுற்றுச்சூழலியல் நிபுணரும் மேலவை உறுப்பினருமான கேலார்ட் நெல்சன் என்பவர் சுற்றுச்சூழல் பற்றிய அறிவைப் பரப்பத் தகுந்த நாளாக 1970 சித்திரை 22 இருக்கட்டும் எனன்று விடுத்தார். இந்த நாளின்போது புவியின் வடகோளப் பகுதி வசந்த காலமாகவும், தென்கோளப் பகுதி இலையுதிர் காலமாகவும் காணப்படுகிறது.

அவரது அழைப்பை ஏற்று 20 மில்லியன் மக்கள் இந்நிகழ்வில் பங்கெடுத்தார்கள். அன்றிலிருந்து ஆண்டுதோறும் இந்நாள் 175 நாடுகளில் புவி ன்பூமிதி நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் அவை ஆனி 5 அன்று உலக சுற்றுச் சூழல் நாளை அனுசரித்து வருகிறது. அதற்குப் புறம்பாகவே இந்தப் பூமி தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. நாம் வாழும் பூமி அனைத்து உயிர்களுக்கதும்எதிர்காலச்சந்ததியினருக்கும்உரியது. அதனைப் பாழாக்கி அழித்துவிட்டுச் செல்லாமல் எதிர்காலத்தினருக்கும் விட்டு வைக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கிறது. மரங்களை வெட்டுவதை நிறுத்தி, முடிந்தவரை மரங்களை வெட்டி, பிளாஸ்ரிப் பொருட்களின் பாவனையை இயன்றவரை குறைத்து, பொலித்தீன் பாவனையை முற்றாகக் கைவிட்டு, மின்சாரப் பாவனையை அத்தியாவசியத்திற்கு மட்டும் என்றாக்கி இந்தப் பூமியைக் காப்பதற்கு எம்மாலான அனைத்து நடவடிக்கைகளையும் நாமும் மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான் பூமி பாதுகாப்பானதாகவும் எதிர்காலத்தைக் கொண்டதாகவும் அமையும்.

இந்த நாளில் சுற்றுச் சூழல் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் அதேநேரம் ஆட்சியாளர்களுக்கும் இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். தேவையான சுற்றுச் சூழல் சட்டங்களை உருவாக்கவும் காடழிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கான சூழலை ஏற்படுத்தவும் ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். மாணவர்கள் மத்தியில் சுற்றுச் சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தாம் வாழும் சூழலை சுத்தமாகவும் அதேநேரம் தூய்மையாகவும் வைத்திருக்கப் பழக்கப்படுத்தவேண்டும்.

# போராட்டங்களை அடக்கும் வகையில் ஜனாதிபதியின் கருத்து அமைந்துள்ளது

### களனி பல்கலை வருகைதரு விரிவுரையாளர் எஸ்.சிவகுருநாதன் காட்டம்

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்படும் போதுஆட்சியாளர்கள்இரண்டு வகையான உபாயங்களை கையாள்வார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் அடக்குமுறையைபயன்படுத்தி மக்களை ஒடுக்குவதற்கான வழிவகைகளை செய்து வருவது அதில் ஒருவகையாகும்.

அதற்காகவே தற்போது புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. அத்துடன் ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்த கருத்து பல்கலைக்கழக பேராசிரியர்களின் போராட்டத்தை அடக்கும் வகையில் அமைந்துள்ளதுஎனகளனிபல்கலைக் கழகவருகைதருவிரிவுரையாளர் எஸ்.சிவகுருநாதன் தெரிவித்தார்.

ஜனநாயகத்துக்கான சிவில் சமூக கூட்டமைப்பு கொழும்பில்நடத்தியசெய்தியாளர்சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பயங்கரவாததடைச்சட்டம் 1979ஆம் ஆண்டு வடக்கில் இருக்கும்பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக கொண்டு வரப்படுவதாக தெரிவித்தே கொண்டுவரப்பட்டது. ஆனால் சுமார் 44 வருடங்களாக இந்த சட்டம் இருந்து வருகிறது.

இந்த சட்டத்தால் தமிழ் மக்கள் எவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்டார்கள் என்பது அந்த மக்களுக்கு தெரியும். பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 3பேர் 14 வருடங்களுக்கு பின்னர் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

ஆனால் தற்போது அரசாங்கம் வர்த்தமானிப்படுத்தி இருக்குகம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பயங்கரவாத தடைச்சட்டத்தைவிட பயங்கரமானது.

ஏனெனில் உத்தேச சட்டமூலத்தில் பயங்கரவாதத்துக்கு சரியான வரைவிலக்கணம் தெரிவிக்கப் படவில்லை. பொதுவாக உலகில்எங்கும்பயங்கரவாதம் என்றால் இதுதான் என விரைவிலக்கணம்தெரிவிக்கப் பட்டதில்லை.

அதனால்ஆட்சியாளர்கள் தங்களுக்கு எதிராக யாராவது குரல் எழுப்பினால் அதனை பயங்கரவாதம்எனதெரிவித்து அவர்களை கைதுசெய்ய முடியுமான நிலை இந்த சட்டமூலத்தின் ஊடாக முடியுமாகிறது.

அத்துடன் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்படும்போதுஆட்சியாளர்கள் இரண்டுவகையானஉபாயங்களைக் கையாள்வார்கள். அதாவது, பொது மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்துஅவர்களுடன்கலந்துரையாடல்களை ஏற்படுத்தி, பிரச்சினைக்குதீர்வுகாண்பது.

அடுத்ததாகபொருளாதார நெருக்கடி ஏற்படும்போது தங்களின்ஆட்சிஅதிகாரத்தை பயன்படுத்தி அடக்குமுறை கையாள்வதாகும்.

அதன்பிரகாரம்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் தற்போது அடக்குமுறையைபயன்படுத்தி மக்களை ஒடுக்குவதற்கான வழிவகைகளையே செய்து வருகிறது. அதற்காகவே தற்போது புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக் கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பல்கலைக்கழக பேராசிரியர்கள் முன்னெடுத்துவரும்போராட்டத்தை அடக்கும் வகையில் கருத்து தெரிவித்திருந்தார்.

தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் போராட்டத்தை ஒருவாரத்துக்குள் முடிவுக்கு கொண்டுவராவிட்டால் அந்த தொழிற்சங்கங்களை தடைசெய்வேன், அவர்களின் சேவையைஅத்தியாவசியமாக பிரகடனப்படுத்துவேன், குறித்த தொழிசங்க தலைவர்கள் அல்லது உறுப்பினர்களது தனிப்பட்ட சொத்துக்களை அரசுடைமையாக்குவேன் எனத் தெரிவித்திருந்தார்.

இதுதொழிற்சங்கங்களை அச்சுறுத்தும் நடவடிக்கையாகும். பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அனுமதிக்கப்பட்டால் இவ்வாறான நிலையே ஏற்படும்.

எனவேநாட்டில்மக்களின் ஜனநாயகம், அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலேயே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக் கப்பட்டிருக்கிறது.

இது தற்போது இருக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தையும்விட பயங்கரமானது. அதனால்இந்த சட்டமூலத்தை அரசாங்கம் வாபஸ்பெற்றுக்கொள்ள வேண்டும் என அழுத்தம் கொடுக்கவே சிவில் அமைப்பினர் ஒன்றுபட்டுள்ளனர். - என்றார்.

# ஈஸ்டர் தாக்குதலுக்கு மைத்திரி ஏன் பொறுப்புக் கூற வேண்டும்?

### தயாசிறி ஜயசேகர கேள்வி



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனவால்மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறிருக்கையில் அவர் எவ்வாறு இந்தத் தாக்குதல்களுக்கு பொறுப்பு கூற வேண்டியவராகின்றார் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர்தயாசிறிஜயசேகர கேள்வியெழுப்பியுள்ளார்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகக் கூட இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். எனவே இதனுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளை கண்டு பிடிப்பதற்கே முக்கியத்துவமளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சு.க.வின் தொகுதி அமைப்பாளர்களுடனான விசேட சந்திப்பு நேற்று (வெள்ளிக்கிழமை) கொழும்பில் இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத்தெரிவித்துள்ளஅவர் மேலும் குறிப்பிடுகையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதாகக்குறிப்பிட்டு ஆட்சியைக் கைப்பற்றிய எவரும் அதனை இது வரை செய்யவில்லை. இதனால் பாதிக்கப்பட்டுள்ளகத்தோலிக்க மக்கள் தொடர்பில் மிகுந்த கவலையடைகின்றோம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை. பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித்ஆண்டகைக்குகாணப்படுவது வேறு பிரச்சினையாகும். அதனை முன்னாள் ஜனாதிபதி மீது திணிப்பது பிரயோசனமற்றது.

இந்த தாக்குதல்களைப் போன்றே, ஏனைய ஆட்சியாளர்களின்காலப்பகுதியிலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால்அவற்றுக்குஅன்றைய ஆட்சியாளர்கள் எவரும் பொறுப்பு கூறவில்லை. அத்தோடு முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரால் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு கோடிக்கணக்கில் இழப்பீடு ஈடு செலுத்தவேண்டியநிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு முதல் நாட்டுக்கு வெளியிலுள்ள சில தரப்பினர் தமக்குதேவையானவர்களை ஆட்சியில் அமர்த்துவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கி வந்தனர். அந்த வகையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகக் கூட இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். இனிவரும் காலங்களிலும் இவ்வாறான நிலைமை ஏற்படக் கூடும்.

எவ்வாறிருப்பினும் இதே நிலைமை தொடர்வதற்கு இடமளிக்காமல் சுயாதீனமாக எமது ஜனாதிபதியை நாமே தெரிவுசெய்யும்நிலைமையை உருவாக்க வேண்டும். - என்றார்.

# தேசிய அடையாள அட்டை வழங்குவதில் புதிய திட்டம்

பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத காரணத்தால் தேசிய அடையாள அட்டைகளைப் பெற முடியாத 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம்அறிவித்துள்ளது.

வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிரந்தர வதிவிடத்துடன், பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தால் தேசிய அடையாள அட்டை பெறாத 40 வயதுக்கு மேற்பட்ட இலங்கை பிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும் குறிப் பிடப் பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிகதகவல்களை பிரதேச செயலக அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஆட்பதிவு திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் என சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.



# மைத்திரிபால சிறிசேனவை சிறையிலடைக்க வேண்டும்

## சரத் பொன்சேகா கோரிக்கை



பலவீனமான ஆட்சியாளர்களும், பாதுகாப்பு படை பிரதானிகளும் இருக்கும் வரை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளை இனங்காண முடியாது.

எவ்வாறிருப்பினும் இதனை வருடக்கணக்கில் காலம் தாழ்த்துவதற்கு இடமளிக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினர்பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா தெரிவித்துள்ளார்.

அத்தோடு இழப்பீடு செலுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு போதாது என்றும், அவர் சிறையிலடைக்கப்பட வேண்டும் என்றும் சரத் பொன்சேகாதெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 21 ஆம் திகதியுடன் 4 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பேலியகொடையில் இடம் பெற்ற அமைதியான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

விடுதலைப் புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கும், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களுக்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளன. இது அரசியல்வாதிகளின் ஆதரவுடன் இடம்பெற்ற சம்பவம் என்று நாம் நம்புகின்றோம்.

பிரபாகரனின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு நாம் ஏற்கனவே பதிலளித்து விட்டோம். இராணுவத்தினரால் அந்த செயற்பாடுகள் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளன. அதே போன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும்.

பாதுகாப்பு தொடர்பில் எவ்வித அக்கறையும் அற்ற ஆட்சியாளர் இருந்தால் மாத்திரமே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளை இனங்காண்பதில் வருடக்கணக்கில் காலம் செல்லும். இது பலவீனமான பாதுகாப்பு அதிகாரிகளின் நிலைப்பாடாகும். அவ்வாறு காலம் கடத்துவதற்கு இடமளிக்க முடியாது.

ஆட்சியாளர்களும், பாதுகாப்புப் படை பிரதானிகளும் சிறப்பாக செயற்பட்டால் சூத்திரதாரிகளை இலகுவான இனங்காணலாம். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முட்டாள் தனமான கருத்துக்களுக்கு எம்மால் பதிலளிக்க முடியாது.

அவரை சிறைலடைக்க வேண்டும். இழப்பீடு வழங்குமாறு அளிக்கப்பட்ட தீர்ப்பு போதுமானதல்ல என்பதே எனது நிலைப்பாடாகும். அவருக்கு இதனை விடகடுமையானதண்டனை வழங்கப்பட வேண்டும். - என்றார்.

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதிகோரி புத்தளத்திலும் ஆர்ப்பாட்டம்



கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்றுஇடம்பெற்ற குண்டுதாக்குதலில்உயிரிழந்தவர்களுக்காகநீதி கோரி புத்தளம் புனித அன்னை மரியாள்தேவாலயத்துக்கு முன் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் அருட்தந்தை, ஆயர்கள், அருட்சகோதரிகள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த குண்டு தாக்குதலில் உயிர் நீர்த்தவர்களுக்காக திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது. அத்துடன் ஆத்மா சாந்தி பிரார்த்தனைகளும் இடம் பெற்றன.

ஏப்ரல் குண்டு தாக்குதலில் உயிரிழந்த மற்றும் படுகாயமடைந்த மக்களுக்கு 4 வருடங்கள் கடந்தும் எந்தவொரு நீதிக்கான நடவடிக்கைகளும் இதுவரையில் முன்னெடுக்கப் படவில்லையென்றும் இதற்கான நீதியை பெற்றுத் தராவிட்டால் ஆர்ப்பாட்டங்கள் நாடளாவிய ரீதியில்தொடர்ந்துமுன்னெடுக்கப்படுமென்று அருட்சகோதரி மலர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.




# இளம் மனைவியை கடத்திய கணவன்!

## சிலாபத்தில் சம்பவம்

திருமணமாகி குடும்பத் தகராறு காரணமாக சுமார் ஒரு வருடகாலமாக பிரிந்து வாழ்ந்து வந்த இளம் பெண் மனைவியை பலரது உதவியுடன் அவரது கணவர் கடத்திச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் சிலாபத்தில் பதிவாகியுள்ளது.

சிலாபம் மனுவங்கமவில் உள்ள தனது பெற்றோர் வீட்டில் கணவனை விட்டு பிரிந்துவாழ்ந்த18வயதுடைய பெண் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், குறித்த பெண்ணின்வீட்டிற்குவிரைந்த அவரது கணவர் மற்றும் ஐந்து பேர் அடங்கிய குழுவினர் வலுக்கட்டாயமாக அந்தப் பெண்ணை தூக்கிச்சென்று வானில் ஏற்றிக்கொண்டு சென்றுள்ளனர்.

# ஒட்டுசுட்டானில் வீசிய கடும்காற்றால் வீடு சேதம்

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட முத்தையன் கட்டு



கிராம அலுவலகர் பிரிவில் ஜீவநகர் மாதிரி கிராமத்தில் கடும் காற்றால் வீடு சேதமடைந்துள்ளது.

இந்த அனர்த்தமானது கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை பெய்த போது வீசிய கடும் காற்றினால் வீட்டின் கூரையில் பொருத்



தப்பட்டிருந்த 7 சீற்கள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

சேதமடைந்த வீடானது, மூன்று அங்கத்தவர்களை கொண்ட குடும்பத்திற்கு அரசாங்கம் வழங்கிய வீட்டுத் திட்டத்திற்கான நிதி முழுமையாக கிடைக்காத நிலையில் நிறுவனம் ஒன்றின் நிதி உதவியில் கட்டிக் கொடுக்கப்பட்டது என தெரியவருகிறது.

தற்காலிக கொட்டிலொன்றும் காற்றினால் சேதமடைந்துள்ளதாக தெரியவருகின்றமை குறிப்பிடத்தக்கது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




**1. உரலார் கேள்வி:-**

முன்னாள் முதலமைச்சர், தன்னிடம் அருந்தவபாலனின் சாதி பற்றிச் சொல்லி, தனது சாதி பற்றியும் விசாரித்தார் என்று முன்னாள் மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் அளித்த பேட்டி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில் :-**

நினைக்க என்ன இருக்கிறது? பத்தைக்குள் இருந்து ஒவ்வொரு முயலாய்ப் பாயத் தொடங்குகிறது. ஆரம்பத்திலேயே அவரது போக்கைப் பார்த்து, அது சரியாயில்லை என்று சொன்னவன் நான். அப்போது என்மேல் பலரும் கோபப்பட்டார்கள். தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா அவர்கள், ஒரு கல்யாணத்தில் என்னைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார். வேறு சிலர் கம்பன் கழகத்துப் பகையால்த்தான் நான் அவரை, தாக்கி வருவதாகச் சொன்னார்கள்.

இப்போதுதான் அவரது உண்மை முகம் வெளிச்சத்திற்கு மெல்ல மெல்ல வரத் தொடங்கியிருக்கிறது. இனத்திற்கு மட்டுமன்றித் தன்னை நம்பிய அனைவருக்கும், அவர் வரிசையாய்த் துரோகம் இழைத்து வருகிறார்.

முதலில், மற்றவர்களின் ஆதரவால் முதலமைச்சரானதும், தான் ஜனாதிபதி மஹிந்தவின் முன் சென்று பதவிப் பிரமாணம் எடுக்கமாட்டேன் என்று அறிக்கை விட்டார். வெற்றி பெற்ற மற்றைய உறுப்பினர்களும் இவரை நம்பித் தாமும் ஜனாதிபதியின் முன் சத்தியப் பிரமாணம் செய்யமாட்டோம் எனக் கூறி, வன்னியில் கூடிச் சத்தியப் பிரமாணம் செய்ய, அடுத்தடுத்த நாட்களிலேயே தனது சிங்களச் சம்பந்திமாரையும் கூட்டிச் சென்று ஜனாதிபதியின் முன் சத்தியப்பிரமாணம் செய்து, தன்னை நம்பிய மற்றவர்களுக்கு நாமம் போட்டார்.

நம் தமிழ் மக்களுக்கு அப்போதும் அவருடைய உண்மை முகம் தெரியவில்லை.

பின்னர், தன்னை அரசியலுக்கு அழைத்து வந்த சம்பந்தனுக்குத் துரோகம் செய்தார். கூட்டமைப்பு ஏதோ பிழையாக நடப்பதாகவும், சரியாக நடக்கும் தனக்கு அக் கட்சிக்குள் இருப்பது கடினம் என்பது போலவும் மறைமுகமாகச் சொல்லத் தொடங்கினார். இடையில் வந்த தேர்தலில், ‘வீட்டைவிட்டு வெளியே வந்து சைக்கிளில் சென்று வாக்களியுங்கள்’ என்பது போல அறிக்கை வெளியிட்டு, கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு மறைமுகமாய் ஆதரவளித்து விளையாட்டுக் காட்டினார்.

நம் தமிழ் மக்களுக்கு அப்போதும் அவருடைய உண்மை முகம் தெரியவில்லை.

அடுத்ததாக, இவரது தோற்றம், படிப்பு, வகித்த பதவி இவைகளையெல்லாம் நம்பி, இவர் தலைமையில் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்தால் நல்லது என நினைத்து, சில புகழ் பெற்ற டாக்டர்களும், முக்கியமான பத்திரிகையாளர் ஒருவரும், கூட்டமைப்பின்மேல் பகை கொண்டிருந்த இன்னும் சிலரும், சில சாமிமாரும் சேர்ந்து பூட்டிய அறையில் இரகசியக் கூட்டம் நடத்தி, தாம் அரசியலில் ஈடுபடப்போவதில்லை எனும் உறுதி மொழியோடு இவரின் தலைமையில் ’தமிழ் மக்கள் பேரவையை’ ஆரம்பித்தார்கள். தனது பதவி முடியும் வரை பகை பாராட்டியபடியே கூட்டமைப்போடு இருந்தார். அப்பதவி தரும் சலுகைகளையெல்லாம் அனுபவித்ததோடு, பதவி முடியும் தறுவாயிலும் ஆட்சியாளர்களிடம் சலுகைகளுக்காகக் கையேந்தி நின்றார். தனது பதவிக்காலம் முடிந்ததுமே, ’அரசியலில் ஈடுபடமாட்டோம்’ எனச் சூளுரைத்திருந்த தமிழ் மக்கள் பேரவையினரின் கூட்டத்தில் வைத்தே, புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்து அவர்களுக்குச் சமாதி கட்டினார். இன்று வீரியமாய்த் தொடங்கப்பட்ட தமிழ்மக்கள் பேரவை எங்கிருக்கிறது என்று பூதக்கண்ணாடி வைத்துத் தேடவேண்டியிருக்கிறது.

• நம் தமிழ் மக்களுக்கு அப்போதும் அவருடைய உண்மை முகம் தெரியவில்லை.

புதிய கட்சி தொடங்கிய பின்பு, கூட்டமைப்பை விட்டுத் தன்னை நம்பிக் கட்சியின் செயலாளராய் வந்த முன்னாள் கல்லூரி அதிபர் அருந்தவபாலனை, வெறும் ’போடுதடி’யாகப் பயன்படுத்தி வெற்று மனிதராக்கினார். ’நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுக் கொழும்பு சென்ற பிறகு, எந்த ஒரு விடயம் பற்றியும் எங்களோடு ஆலோசித்து அவர் முடிவெடுப்பதில்லை’ என அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரோடு ’ஒப்பாரி’ வைத்துவிட்டு இன்று அரசியல் துறவறம் பூண்டு நிற்கிறார் அருந்தவபாலன்.

நம் தமிழ் மக்களுக்கு அப்போதும் அவருடைய உண்மை முகம் தெரியவில்லை.

கூட்டமைப்போடு இருந்த காலத்தில் சைக்கிளில் சென்று யாருக்கு வாக்களிக்கச் சொல்லி ஆதரவு காட்டினாரோ, அதே கஜேந்திரகுமாரை, இன்று, தான் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்துவிட்ட துணிவில், முடிந்த அளவு தூற்றி அவர் இனத்தலைமைக்குப் பொருத்தமில்லாவர் என்பது போல் பேசிவருகிறார். அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் கஜேந்திரகுமார் மீளவில்லை என்கிறார்கள்.

• நம் தமிழ் மக்களுக்கு அப்போதும் அவருடைய உண்மை முகம் தெரியவில்லை.

அண்மையில் தமிழ் அரசுக் கட்சியின் எதிரிக் கட்சிகள் ஒன்றிணைந்தபோது, அவை இவரையும் துணைக்கு அழைக்க, தனக்குக் குறித்த பதவி வேண்டும் என்பதான பல நிபந்தனைகளை விதித்துப் பிடிவாதம் பிடித்தவர், அவர்கள் அவரது கோரிக்கையை நிராகரிக்க அவர்களை விட்டும் நல்லவர் போலத் தன்னைக்காட்டி அங்கிருந்து வெளியேறினார். சட்டியிலிருந்து நெருப்பினுள் குதித்த கதையாய் இவரை நம்பிக் கூட்டமைப்பை விட்டு வெளியேறி வந்த கட்சிகள் இன்று ’திரிசங்கு சொர்க்க’ நிலை எய்தி நிற்கிறார்கள்.

• நம் தமிழ் மக்களுக்கு அப்போதும் அவருடைய உண்மை முகம் தெரியவில்லை.

தனது பதவிக் காலத்தில் எதிர்ப்புகள் பலவாகக் கிளம்பியபோது, தன்னைக் கைவிடாது உடனிருந்த முன்னாள் மாகாணசபை அமைச்சர் ஐங்கரநேசனையும் அவர் ஏமாற்றிய கதை இப்போது வெளியாகியிருக்கிறது. தனது பதவியை உறுதி செய்வதற்காக, பொய்மைகளும் வஞ்சனைகளும் செய்த முதலமைச்சர், தான் தப்பித் தங்களை மாட்டிவிட்ட உண்மைகளைப் பகிரங்கமாய் வெளிப்படுத்தியிருக்கிறார் ஐங்கரநேசன். நம் இனத்திற்குப் பயன்படத்தக்க, காலாகாலமாய் இன உணர்ச்சியைக் காட்டி நின்ற, போராட்டக் காலத்திலும் பங்களிப்புச் செய்த ஒருவரைத் தன் சுயநலத்திற்காகப் பலி கொடுத்து மக்கள் முன் குற்றவாளியாய் நிறுத்தியதோடல்லாமல், அவரது சாதியையும் விசாரித்து தனது உள்ளத்தின் அழுக்கைக் காட்டியிருக்கிறார் அந்த மனிதர்.

நம் தமிழ் மக்களுக்கு அப்போதும் அவருடைய உண்மை முகம் தெரியவில்லை.

இனித்தானும் தமிழ் மக்கள் இவரது சாதி வெறி, பதவி ஆசை, இனப்பற்றின்மை, நேர்மையின்மை, வஞ்சனை என்பவற்றைக் கொண்ட உண்மை முகத்தை அறிவார்கள் என்று என்னால் உறுதியாய்ச் சொல்ல முடியவில்லை. எங்கள் மக்களுக்கு இவையெல்லாம் இரண்டாம் பட்சம்தான். அவர்களுக்கு பெரியபதவி, பெரிய படிப்பு, பக்தித் தோற்றம் என்பவை இருந்தால் போதும். நடப்பதை வேடிக்கை பார்ப்பதைவிட எம்மால் என்ன செய்யமுடியும்?

**சல்லடையாரின் சலிப்பு :- இந்தாளும் ’பொயிண்ட் பொயிண்டா’ சொல்லித்தான் பாக்குது. அவரும் அசையிறதாத் தெரியேல்ல, சனமும் அசையிறதாத் தெரியேல்ல.**

**2. உரலார் கேள்வி:-**

தமிழ்நாட்டில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அண்ணாமலை, நான் சொன்னது போலவே அமைச்சர்களது சொத்துப்பட்டியல்களைத் துணிவாய் குறித்த திகதியில் வெளியிட்டு விட்டாரே பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில் :-**

ஒன்றரை இலட்சம் கோடிகள் எனக் கணக்குக் காட்டியிருக்கிறார். அந்த எண்ணிக்கையை எப்படி எழுதுவதென்றுகூட எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று, இந்த ஊழல்கள் பற்றி அல்ல கவலை. இத்தகைய ஊழல்களுக்கான அங்கீகாரம் பற்றியே நான் கவலைப்படுகிறேன்.

அண்ணாமலை இந்தக் கணக்கைக் காட்டுவதற்கு முதலே, இத்தகைய ஊழல்கள் நடைபெற்று வருவது மக்களுக்குத் தெரிந்த விடயம்தான். அதனால் தொகை அதிரச் செய்ததே தவிர, செய்தி அதிரச் செய்யவில்லை. தேர்தல் காலத்தில் வீடு வீடாகச் சென்று மக்களுக்குப் பணம் கொடுத்தபோது, இவ்வளவு பெருந்தொகையான பணம் எங்கிருந்து வருகிறது என மக்கள் ஊகிக்க முடியாமலா இருந்தார்கள்?

தி.மு.க. வுக்கு, திருடனுக்குத் தேள் கொட்டிய நிலை. ஏதாவது பேசப்போக, அண்ணாமலை இன்னும் தங்களைத் தோண்டுவாரோ எனும் பயத்தில் அவர்கள் மௌனம் காக்கிறார்கள். பெயருக்குத் தங்கள் கட்சியைச் சார்ந்த ஆர்.எஸ்.பாரதி என்;பவரைக் கொண்டு ’ஒப்;புக்குச் சப்பாணியாய்’ ஏதோ சொல்ல வைத்திருக்கிறார்கள். உரியவர்கள் இதுவரை வாய் திறக்காதது எங்கோ இடிக்குமாப் போல்த் தோன்றுகிறது.

ஆராயப் போனால், இந்த ஊழல் தமிழ்நாட்டைக் கடந்து, பாரதம் முழுவதுமே பரவும் போல்த் தெரிகிறது. ரிஷிகளும், ஞானிகளும், அடியார்களும், அறிஞர்களும் தோன்றி அறம் வளர்த்த பாரத மண்ணில், ஜனநாயகத்திற்கே முரணான இந்த ஊழலுக்கான அங்கீகாரம், உண்மைத் தேச பக்தர்களை நிச்சயம் கண்ணீர் விட்டு அழச் செய்யும். காந்தி பிறந்த மண்ணில் கயவர்களுக்கு அங்கீகாரமா?

பாரதத்தில் மீண்டும் ஒரு சுதந்திரப் போராட்டம் சீக்கிரம் எழப்போகிறது. அந்தப் போராட்டம் ஆங்கிலேயருக்கு எதிரானதாய் இருக்காது என்பது மட்டும் நிச்சயம்.

அண்ணாமலை அனைவரையும் அதிரச்செய்துவிட்டது உண்மையே. இணையத்தளங்களில் அங்கிங்கெனாதபடி அவர் முகம்தான் நிறைந்து கிடக்கிறது. எதிராளிகள் தங்கள் குற்றத்திற்குப் பதில் சொல்லாமல், அவர் மீது குற்றம் சாட்ட முனைந்து கொண்டிருக்கிறார்கள். பிழைக்குப் பிழை சரியாகிவிடும் என்று நினைக்கிறார்கள் போல!

இந்த அதிரடியால் அண்ணாமலை எங்கோ உயரத்திற்குப் போய்விட்டார் என்பது மட்டும் உண்மை. இந்தத் திடீர் வளர்ச்சியை அவர் தாங்குவாரா? எதிரிகளின் எண்ணிக்கையைக் கூட்டிக் கொண்டே போகிறார். இனி அவர் வைக்கப்போகும் ஒவ்வொரு அடியையும் பலரும் கவனிக்கப் போகிறார்கள். அவர் பயணத்தில் ஒரு சிறு பிழை தெரிந்தால்கூட இனி அது பூதாகரமாக ஆக்கப்படும் என்பது மட்டும் நிச்சயம்.

எதிராளிகள் பற்றிய உண்மைகளை வெளியிட்டு நல்லவர்களின் உள்ளம் கவர்ந்திருக்கிறார். இதேபோல தம்மைச் சார்ந்தவர்கள் பற்றிய உண்மைகளையும் வெளியிட்டாரேயானால், யாராலும் அசைக்க முடியாத உயரத்திற்கு அவர் போய்விடுவார். அந்த உயரத்தை அவர் தொட ஈழமண்ணும் வாழ்த்தி நிற்கிறது.

**சல்லடையாரின் சலிப்பு :- அவரைத் தொடுவாரேன்? கவலைப்படுவானேன்?**

**3. உரலார் கேள்வி:-**

யாழ் பண்ணை வீதியில் வைக்கப்பட்ட நயினை நாகபூசணி அம்மன் சிலையை அவ்விடத்திலிருந்து எடுக்கவேண்டுமெனப் பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார்களாமே?

**உலக்கையார் பதில் :-**

நல்ல விடயம். எடுக்கவேண்டியதுதான். பொலிஸாருக்கு இப்பொழுதுதான் பொறுப்புணர்ச்சி வந்திருக்கிறது. அதற்காக அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும். அதேநேரத்தில் அவர்களுக்கு ஒரு சிறிய ’அட்வைஸ்’. நீங்கள் முதலில் இலங்கை பூராகவும் உள்ள வீதிகளில், இந்த சிலைக்கு முன்னதாக வைக்கப்பட்ட சிலைகளையெல்லாம் அகற்றுங்கள். அதற்குப் பிறகு எங்கள் மக்களே அம்மன் சிலையைக் கடலில் தூக்கிப் போட்டுவிடுவார்கள்.

**சல்லடையாரின் சலிப்பு :- சவாலே! சமாளி!**

**4. உரலார் கேள்வி:-**

அம்மன் சிலை வழக்கிலும் சுமந்திரன்தான் முன்னுக்கு நிற்கிறார் பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில் :-**

இதற்கு நான் பதில் சொன்னால் என்னைச் சுமந்திரனின் வால் என்று சொல்லப்போகிறார்கள். அதற்காகப் பதில் சொல்லாமல் இருக்கமுடியுமா? திருக்கேதீஸ்வர அலங்கார வளைவை பாதிரியார் தலைமையிலான ரௌடிக் கும்பல் உடைத்த வழக்கில், நேர்மைக்காகத் தன் மதம் சார்ந்தவர்களுக்கு எதிராகவே வழக்குத் தொடுத்துப் பேசிவருகிறார். கன்னியா, வெடுக்குநாறி மலை என்பவற்றில் மட்டுமல்லாமல், மாற்றுக் கட்சியினர் அநியாயமாகக் கைது செய்யப்படும் போதும், உண்மைக்குச் சார்பாக அவர்தான் எங்கு பார்த்தாலும் பாரபட்சமின்றி, பேசி வருகிறார். உண்மையைச் சொல்லப் போனால், நாளுக்கு நாள் சுமந்திரன் மதம் கடந்த இனத்தலைவராய் மாறி வருவது தெளிவாகிறது. அவர் மேலும் உயர என் வாழ்த்துக்கள்.

**சல்லடையாரின் சலிப்பு :- இது அறிவால் விளைந்த ஆதரவா? அன்பால் விளைந்த ஆதரவா?**




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.04.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 08 வெள்ளிக்கிழமை 21.04.2023 கதிர் 35

## இருக்க முடியாவிட்டால் உடன் வெளியேறுங்கள்

### ராஜிதவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை



ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்க முடியாவிட்டால்ராஜிதசேனாரத்னகட்சியிலிருந்து வெளியேறலாம் - என்று அக்கட்சியின் செயற்குழு உறுப்பினரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்பிபெரேரா தெரிவித்தார்.

ராஜித சேனாரத்ன எம்முடன் இணைந்து 2

## அமைச்சுப் பதவி பற்றி கதைக்க ஆசை இல்லை

### எஸ்.பி. அதிரடிப் பதில்





அமைச்சுப் பதவி பற்றி கதைப்பதற்குக்கூட ஆசை இல்லை. இனி அதைப் பற்றிக் கதைக்கப்போவதும் இல்லை - என்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

மொட்டுக்கட்சியின்தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது, 'அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. எப்போது கல்வி அமைச்சைப் பொறுப்பேற்கின்றீர்கள்? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே எஸ்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அது பற்றி எனக்குத் தெரியாது. அதுகுறித்துகதைப்பதற்குக்கூட விரும்பவில்லை. கருத்து வெளியிடவும் மாட்டேன். பதவியைக்கேட்டுபெறப் போவதும் இல்லை. - என்றார் அவர். (02)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு அமெ, பிரி, ஐ.ஒன்றியமும் எதிர்ப்பு

### ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை பாதிக்கும் என்றும் தெரிவிப்பு




இலங்கை ஆட்சியாளர்கள் முன்வைத்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு ஐரோப்பிய ஒன்றியமும் பிரிட்டன் மற்றும் அமெரிக்காவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அது ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகையைப் பாதிக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துமுள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான தமது ஆட்சேபனையை ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் அயலுறவுக்கருப் பொறுப்பான பிரதி முகாமையாளர் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரிக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார் என்று டெய்லி மிரர் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மகிந்த சமரசிங்கவை அழைத்து பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான தனது நிலைப்பாட்டை வோஷிங்டனும் தெரிவித்துள்ளது என்று அந்தச் செய்தி கூறுகின்றது. உத்தேச பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தப்படாவிட்டால் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படும் என பிரிட்டிஷ் அதிகாரிகளும் எச்சரித்துள்ளனர் என்று டெய்லிமிரர் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

ஏப்ரல் 17 அன்று, ஜனாதிபதி மற்றும் அவரது தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற தேநீர் விருந்தில் கலந்துகொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஜிஎஸ்பி பிளஸ் சலுகையை பாதிக்கும் என்பதை எடுத்து விளக்கியுள்ளனர்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஏப்ரல் 25 நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. அது ஏற்கனவே வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமூலத்திற்கு நாட்டில் பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். இந்தச் சட்டம் வேண்டாம் என்று வலியுறுத்தி வடக்கு கிழக்குப் பெண்கள் கூட்டு என்கிற அமைப்பு வியாழக்கிழமை வடக்கு கிழக்கில் உள்ள பல மாவட்டங்களிலும் ஆர்ப்பட்டம் செய்தனர்.

முதன்மை எதிர்க் கட்சியான மக்கள் ஐககிய கட்சியும் ஏனைய எதிர்க் கட்சிகளும் இந்தச் சட்ட மூலத்தைக் கடுமையாக எதிர்க்கின்றன. ஜனநாயகத்திற்கு எதிரான சட்டம் இது என்று கூறுகின்றன.

## அதிக வெப்பம் காரணமாக மனநோய் ஏற்படும் அபாயம்

### வன்முறையும் வெடிக்கலாம் என எச்சரிக்கை



இலங்கையில் தற்போது நிலவும் அதிக வெப்பமான காலநிலையால் மன உளைச்சல்உள்ளிட்ட மனநோய்கள் அதிகரிக்கலாம் என மனநல மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்தார்.

இதனால் மக்கள் வன்முறைக்கு உள்ளாக நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக மக்கள் பல்வேறு குற்றச்செயல்களில்ஈடுபடலாம் எனச் சுட்டிக்காட்டிய அவர், இவ்விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மனநோய்களுக்கு மருந்து உட்கொள்பவர்களுக்குத்தாகம்குறைவதாகவும், அதனால் அவர்கள் நீர்ச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படுவதாகவும் மனநல மருத்துவர் ரூமி ரூபன் மேலும் கூறினார்.

இதேவேளை, அதிக வெப்பமான காலநிலை காரணமாக குழந்தைகளின் சிந்திக்கும் திறன் குறைவடையக்கூடும் எனவும், இதனால் பிள்ளைகளுக்குக் கல்விச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. இந்தக் கடும் வெப்பமான காலநிலை மே இறுதி வரை நீடிக்கும் எனவும்வானிலைஆய்வுநிலையம் கணித்துள்ளது. (02)

## நல்லூர் தாக்குதல்: மூவர் கைது



யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள விடுதிக்குள் அத்துமீறிநுழைந்துதாக்குதல் மேற்கொண்டு விடுதி உரிமையாளர் மீது சாணி தண்ணி ஊற்றி தாக்குதல் நடத்தியமை தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கணவன் மனைவி உள்ளிட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் பாணாண்குள வீதியில் அமைந்துள்ளது லக்ஸோட்டியா அரைச்சொகுசு விடுதி. 2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஆதரிப்பவர்கள் தேசத் துரோகிகளே!

### அருட்தந்தை சத்திவேல் காட்டம்




பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஆதரித்தால் தேசத் துரோகிகள் என்றே அடையாளப்படுத்தப்படுவார்கள் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலத்திலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயக விழுமியங்களை அழித்தொழிக்கும் நச்சு சட்டமூலமாகும். தனி மனித மற்றும் சமூகத்தினதும் உரிமைகளை அரசு பயங்கரவாத இயந்திரங்களான பொலிஸ் மற்றும் படைகளின் சப்பாத்தின் கீழே வைத்து துவம்சம் செய்யவே வழி வகுக்கும். மனிதனை மனிதனாக ஏற்றுக்கொள்ளாது நடமாடி திரியும் ஜடமாக வைக்கவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கொடுமைகளை கடந்த 44 ஆண்டுகளாக அனுபவிக்கும் மக்கள் சமூகமாக இப்போது புதிய சட்ட-மூலத்தை எதிர்க்க வேண்டுமென அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கோருவதோடு வடகிழக்கில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடக்கவிருக்கும்கடையடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவும் வழங்குகின்றது. பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்காரணமாகதமிழர்களாகிய நாம் அரசியல் அழிவைச் சந்தித்துள்ளதோடு குடும்ப உறவுகளையும், சமூக உறவுகளையும் காவுகொடுத்திருக்கின்றோம். சமூகமாகச் சிதறுண்டு போயிருக்கின்றோம். பல நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் வாழ்விழந்துள்ளனர். இன்னும் பலர் இன்றும் சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் விடுதலைக்காக ஏங்கிக் கொண் டிருக்கும் நிலையிலேயே நாட்டை திறந்த வெளி சிறைக்குள் வைக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் கொண்டுவரப்பட இருக்கின்றது. இது கொடூர முகத்தோடு தனது கோரப் பற்களைக் காட்டும் என்பது உண்மை. 2

## யாழ். பல்கலையிலும் உயிர்த்த ஞாயிறு படுகொலைகளின் நினைவேந்தல்



உயிர்த்த ஞாயிறு படுகொலைகளின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் நடத்தப்பட்டது.

கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சில்வெஸ்டார் ஜெல்சின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாணவர்கள் பலர் 2

## வியட்நாமிலிருந்து 23 இலங்கையர்கள் நாடு திருப்பினர்

சட்டவிரோதக் குடியேற்றத்துக்கானபயணத்தின்போது வியட்நாம் கடற்பரப்பில் இருந்து மீட்கப்பட்ட 303 இலங்கையர்கள் அடங்கிய குழுவில் இருந்த மேலும் 23 இலங்கையர்கள்கொழும்புக்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர்என்று இலங்கைக் கடற்படையினர் இன்று தெரிவித்தனர்.

2022. நவம்பர் 7 ஆம் திகதியன்று வியட்நாமு-க்கு அப்பால் கடலில் படகு விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட இலங்கையர்களில், 151பேர் வியட்நாமில் இருந்துநாடுகடத்தப்பட்டு2022 டிசம்பர் 28 ஆம் திகதியன்று இலங்கை வந்தடைந்தனர்.

இந்தநிலையில் வியட்நாமில் இருந்து நாடு கடத்தப்பட்ட மேலும் 23 இலங்கையர்கள் இந்த வாரம் கட்டுநாயக்க வந்தடைந்தனர்என்றுகடற்படை தெரிவித்துள்ளது.

அவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்எனஅடையாளம் காணப்பட்டுள்ளனர். (02)

## உயிர்த்த ஞாயிறு படுகொலைகளுக்கு நீதி கோரி தீப்பந்த பேரணி, மனிதச் சங்கிலிப் போராட்டம்



உயிர்த்த ஞாயிறு படுகொலைகளின் நான்காம் ஆண்டுநிறைவைமுன்னிட்டு இன்று காலை கொழும்பு, கொச்சிக்கடை அந்தோணியார் தேவாலயத்தின் முன்பாக இருந்து நீர்கொழும்பு வரையிலும் மனிதச் சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது. படுகொலைகளுக்கு நீதி வேண்டி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

முன்னதாக நேற்று இரவு முழுவதும் கட்டுவாப்பிட்டி தேவாலயத்திலிருந்து தீப்பந்தங் களுடனான போராட்டம் கொழும்பு கொச்சிக்கடையை இன்று வந்தடைந்தது.

இந்தப் போராட்டத்தை நடத்திய நீர்கொழும்பில் உள்ள கத்தோலிக்க சமூகம் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையைவெளிக்கொணருமாறு அழைப்பு விடுத்தது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பாதிரியார்களுள் ஒருவரும், போராட்டத்திற்கு முன்னதாக ஆராதனையின் போது சொற்பொழிவு ஆற்றியவருமான அருட்தந்தை றொபின்சன் விஜேசிங்க, மக்கள் விரும்புவது தாக்குதல் தொடர்பான உண்மையைக் கண்டறியப்படவேண்டும் என்பதைத்தான் என்றார்.

தாக்குதல் குறித்த முன்னெச்சரிக்கைகள் பெறப்பட்டு, ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எச்சரிக்கைகள் அனுப்பப்பட்டன, ஆனால் தாக்குதலைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது ஏன் நடந்தது என்பதை அறிய நாங்கள் விரும்புகிறோம், என்று அவர் கூறினார்.

கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் இருந்து நேற்றிரவு 8 மணியளவில்தொடங்கிய இந்த ஆர்ப்பாட்ட பேரணி இன்று அதிகாலை கொழும்பை வந்தடைந்தது. அங்கு காலை ஆராதனைகள் மற்றும் உயிர்த்த ஞாயிறு படுகொலைகளுக் கான திருப்பலி ஒப்புக்கொடுத்தலுக்குப் பின்னர் கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரையில் மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்று காலை 8 மணிக்கு இடம்பெற்றது.

## இந்திய வர்த்தக அமைச்சர் இலங்கை தூதருடன் பேச்சு



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஆணையர் மிலிந்த மொரகொட இந்திய மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயலைச் சந்தித்துள்ளார்.

புதுடில்லியில் உள்ள வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கடந்த பெப்ரவரியில் அவர்கள் இருவரும் கலந்துரையடிய விடயங்களின் மேம்பட்ட சந்திப்பாகவே இது 2

# திருக்கோவில் மயானம் கடலரிப்பால் ஆபத்தில்







(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச மயானம் கடலரிப்பின் ஆபத்துக்கு உள்ளாக்கப் பட்டு இருக்கிறது .

கடந்த சில நாட்களாக திருக்கோவில் மயான பிரதேசத்தில் கடல் அரிப்பு மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது.

அதன் காரணமாக அங்கிருந்த கல்லறைகள் சில கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு இருக்கின்றன . மயானப் பிரதேசமும் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக திருக்கோவில் உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரனிடம் கேட்டபோது. மயானப் பகுதி கடல் அரிப்புக்கு உள்ளாகி வருகின்றது உண்மை . கரையோர பாதுகாப்புதிணைக்களத்தினர் அங்கு கல் போடுவதற்கான ஏற்பாடுகளை செய்து இருக்கின்றார்கள்.- என்றார்.

கடந்த காலங்களில் திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆல யத்திற்கு முன்பாக பெரும் கடலரிப்பு ஏற்பட்டிருந்த வேளையிலே கல்லணை போடப்பட்டுத் தடுத்திருந்தார்கள்.

# மருதமுனையில் ஊடகப் பேரவை தொடங்கப்பட்டது







(பாறுக் ஷிஹான்)

மருதமுனையில் ஊடக பேரவை தொடங்கப்பட்டது. வியாழக்கிழமை மாலை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் பெண்கள் பிரிவில் பேரவையின் நிறுவுனர் கலாபூணம் பி.எம்.எம்.ஏ.காதர் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

மூத்த ஊடகவியலாளர் எம்.எல்.எம். ஜமால்டீன் தலைவராகவும்,ஜெஸ்மிஎம்.மூஸாபொதுச்செயலாளராகவும், ஏ.எல்.எம். ஷினாஸ் பொருளாளராகவும், தெரிவு செய்யப்பட்டனர். பிரதித் தலைவர், உப தலைவர்கள், தவிசாளர், பிரதிச்

செயலாளர், அமைப்பாளர், ஊடக இணைப்பாளர், கணக்காய்வாளர்அடங்கலாகநிர்வாகக்குழுஉறுப்பினர்களாக பதின்மரும் ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

நிகழ்வில் ஸ்தாபகரும் பிரதித் தலைவருமான கலாபூ-ணம் பி.எம்.எம்.ஏ.காதர், தலைவர் எம்.எல்.எம்.ஜமால்டீன், பொதுச் செயலாளர் ஜெஸ்மி எம்.மூஸா, பொருளாளர் ஏ.எம்.ஷினாஸ், தவிசாளர் சிரேஷ்ட ஒலி-ஒளபரப்பாளர் ஊடக வித்தகர் இஸ்மாயில் பீ.மஆரிப், உபதலைர்களான பிறை எப்.எம்.கட்டுப்பாட்டாளர் பஷீர் அப்துல் கையூம், சிரேஷ்ட அறிவிப்பாளர் ஏ.முகம்மட் அன்சார், சட்ட ஆலாசகர் சபை உறுப்பினர் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் றைசுல் ஹாதி, போசகர் சபை உறுப்பினர் ஐ.ஏ.பரீட், பிரதிச் செயலாளர் ஏ.ஆர்.ஏ.நபாயிஸ் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

இப்பேரவையானது மருதமுனை, பெரியநீலாவணை, அக்பர் கிராமம் மற்றும் பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவுகளை உள்ளடக்கிய அச்சு, இலத்திரனியல் ஊடகவியலாளர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளி பாதருக்கு நேற்றைய தினம் முல்லைத்தீவில் நினைவேந்தல்







(ஜெகதீஸ்வரன் பிராந்தி)

படுகொலைசெய்யப்பட்டகிளிபாதரின் நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவில் நேற்று உணர்வுபூர்வமாக நடைபெற்றது

2008 ஏப்ரல் 20 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம் 6ஆம் கட்டை பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியின் கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார் அருட் திரு சேவியர் கருணாரட்ணம் (கிளி பாதர்). அவரது 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனிக்குளம் அன்னைவேளாங்கண்ணி ஆலயத்தில் இடம்பெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுவிசேடவழிபாடுகள் நடைபெற்றன.

இறுதிப் போரின் பின்னர் இராணு-வத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட ஜோசப் பிரான்சிஸ் அடிகளாருக்காகவும் மன்றாடப்பட்டது அதனைத் தொடர்ந்து கிளி பாதரின் கல்லறைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு மரக்கன்றுகளும் நாட்டு வைக்கப்பட்டன

நிகழ்வில் கொழும்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மட்டக்களப்பு திருகோணமலை உள்ளிட்ட பல்வேறுமாவட்டங்களைசேர்ந்த அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மக்கள் என பலரும் கலந்து

கொண்டிருந்தனர் படுகொலைசெய்-யப்பட்டவணபிதாகனகரட்ணம்(கிளிபாதர்) வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். போர்க் காலங்களில் மக்களுக்கான மனிதாபிமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தார். அம்பாள்புரம் பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றில் ஆராதனையில் கலந்து விட்டு தனது வாகனத்தில்திரும்பிக்கொன்ண்டு இருந்த பொழுது கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.

## இருக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட்டவர். எனினும், கட்சியில் இருந்து வெளியேறுவது போன்ற அறிவிப்புகளை ஊடகங்களுக்கு வெளியிட்டு வருகின்றார்.

ஒன்று கட்சியில் இருக்க வேண்டும் அவ்வாறு இல்லாவிட்டால் வெளியேற வேண்டும். அப்போது எம்மால் அடுத்தகட்ட நகர்வுகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும். - என்றார்.

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்க ளுக்கு மலரஞ்சலி செலுத்தி அஞ்சலித்தனர்.

மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்திருந்தது. இரு தரப்பு வர்த்தகத்தின் விரிவாக்கம், இலங்கை இடையே ரூபா வர்த்தகத்தை நிறுவுதல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியா, இலங்கையின் பொருளாதார மீட்சியில் வகிக்கக்கூடிய முக்கிய பங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (02)

## நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு வியாழக்கிழமை இரவு அத்துமீறி நுழைந்த 3 பெண்கள் உள்ளிட்ட 7 பேர் கும்பல் தாக்குதல் நடத்தியது. விடுதியின் முன்பக்கக் கண்ணாடியை அடித்து உடைத்ததுடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வாகனங்கள் மீதும் தாக்குதல் நடத்தினர். விடுதி உரிமையாளர் மீது சாணித் தண்ணீரையும் ஊற்றியுள்ளனர். இதனால் பல இலட்ச ரூபாய் பெறுமதியான பொருட்கள் சேதமாக்கப் பட்டுள்ளதாகவும் , கண்காணிப்பு கமரா கட்டுப்பாட்டு தொகுதியை உடைத்து அவர்கள் தம்முடன் எடுத்து சென்றுள்ளதாகவும் விடுதி உரிமையாளர் பொலிஸாரிடம் முறையிட்டிருந்தார்.

இந்த விடுதி உரிமையாளர் ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பளராக இருக்கின்றார். அந்தக் கட்சியின் அலுவலகமொன்றும் இந்த விடுதியில் இயங்கி வருகின்றது.

இந்தத் தாக்குதலுக்கும் அரசியல் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் தனிப்பட்ட குடும்ப விவகாரமே இதற்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர். விடுதி உரிமையாளர் வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்திய சந்தேகத்தில் பொலிஸாரினால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை ஏற்றுக்கொள்வது சமூக தற்கொலைக்கு விட்டுச் செல்லும் எனலாம்.

மக்களின் பாதுகாப்பு எனும் மாய்மாலத்தோடு கொண்டு வரப்படும் இச்சட்டம் மூலம் இதுவரை காலமும் நாட்டைக் கொள்ளையடித்து பொருளாதார வறுமைக்குள் தள்ளியவர்களையும், யுத்தக் குற்றவாளிகளையும் பாதுகாப்பதற்கான முன் ஏற்பாடு என்பதோடு இச்சட்டமூலத்தை அமுலாக்குவதன்மூலம்தனது ஆட்சிஅதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளவும், ஆட்சியைத் தொடரவும் ஜனாதிபதி முயற்சிப்பதை நாம் உணரலாம்.

அது மட்டுமல்ல நாட்டின் வளங்கள் ஏற்கனவே வெளி சக்திகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. மலும் கொடுப்பதற்கான திட்டங்களே உள்ளன. தற்போதைய நாட்டின் வங்குரோத்து நிலை மேலும் தொடர்வதற்கான வாய்ப்புகளே உள்ளன. இவற்றுக்கு எதிரான மக்கள் எழுச்சியை அடக்கவும், அனைத்து வகையான செயற்பாட்டாளர் களையும் அசைவற்றவர்க ளாக்கி அரசாங்கத்தைப் பாது காக்கவுமே திட்டமிடுகின்றனர்.

இச்சட்டமூலம் அமுலாக்கப்பட்டால் தற்போது வடகிழக் கில் நடக்கும் காணி சுவீகரிப் புக்கு எதிரான போராட்டம், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம், தொல்லியல் திணைக்களத்திற்கு எதிரான போராட்டம், பௌத்தமயமாக்களுக்கு எதிரான போராட்டம் என அனைத்தையும் பயங்கரவாத மாக்க முடியும்.

இதனை விட முள்ளி வாய்க் கால் நினைவேந்தல் பிரதேசத்தை மக்கள் கூடுவதற்கு தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்கவும் முடியும். மாவீரர் துயிலும் இல்ல பிரதேசங்களையும்தடைசெய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்க முடியும்.

முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் மற்றும் மாவீரர் நினைவு நாள் சம்பந்தமாக செயற்படுகின்றவர்களை பயங் கரவாதிகளாக்கி சிறைக்கும் தள்ள முடியும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்பு தோன் றியிருக்கும் நிலையில் 44 வருட காலமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் அழிவு களைச் சந்தித்த அனுபவம் கொண்டவர்களாக எந்த வகையிலும் புதிய சட்டமூலம் நடைமுறைக்கு வரக்கூடாது என்பதிலே உறுதி கொண்டு அதனை எதிர்ப்பதற்கான தார்மீக பொறுப்பும் எமக்கு உள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். அத்தோடு புதிதாக முன்வைக் கப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமும் எத்தகைய திருத்தங்களுடன் நாடா ளுமன்றத்திற்கு வரக்கூடாது. அவ்வாறு நாடாளுமன்றத்திற்கு வந்தால் அதனை ஆதரிப்பவர்கள் மக் கள் துரோகிகள் தேசத் துரோ கிகள் என்றே அடையா ளப்படுத்தப்படுவார்கள்.

அதேநேரம் விசேடமாக 25ஆம் திகதி நடத்தவிருக் கும் வடக்கு, கிழக்கு தழுவிய கடையடைப்புப் போராட்டம் நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் அமைவதால் அரசாங்கம் ஒற்றையாட்சி அதிகாரத்தோடு இந்தியாவுடன் இணைந்து தமிழர்களின் அரசியல் பிரச்சி னைக்குத் தீர்வாக திணிக்க முயலும் 13 ஆம் திருத்தத்தை எதிர்ப்பதாகவும் போராட்டத்தை நடத்த வேண்டும். அதுவே இந்திய, இலங்கை அரசியலுக்கு மட்டுமல்ல சர்வதேசத்திற்கும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கும் தெற்கின் மக்களுக்கும் செய்தியாக அமையும். - என்றார். (02)

# வயோதிபப் பெண் வெட்டிக் கொலை!

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட ஹோல்ட்றீம் தோட்டத்தில் 69 வயது மதிக்கத்தக்க தாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தனி வீடு ஒன்றின் சமையலறையில் இருந்து வெட்டுக்காயங்களுடன் குறித்த தாய், சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ள தாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் சடலமாக மீட்க்கப் பட்டுள்ள தாய் அக்கரப்பத்தனை, சின்ன நாகவத்தை தோட்டத்தைச் சேர்ந்த வெங்கடாசலம் சத்தியபாமா (வயது 68) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

அவர் சின்ன நாகவத்தை தோட்டத்திலிருந்து லிந்துலை, ஹோல்றீம் தோட்டத்தில் வசிக்கும் மருமகனின் வீட்டுக்குக் கடந்த ஞாயிற்றுகிழமை வந்திருந்தார் என்று தெரிய-வந்துள்ளது. அவர் அணிந்திருந்த நகைகளும் மாயமாகியுள்ளதாகத் தெரி வித்த பொலிஸார், அவரைக்கொலை செய்ததன் பின்னர் நகைகளைக் கொள்ளையடித்து இருக்கலாம் என்றும் தெரிவித்தனர்.

மருமகன், மகள், பிள்ளைகள் இருவர் வசிக்கும் இந்த வீட்டில் சம்பவம் இடம்பெற்ற வேளையில் வீட்டில் தாய் தனியாக இருந்துள்ள நிலையில் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், தாயின் காது, கழுத்து மற்றும் மார்புப் பகுதிகளில் பாரிய வெட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

ஹோல்றீம் தோட்ட பாடசாலை யில் கல்வி கற்கும் அந்த வீட்டைச் சேர்ந்த சிறுமி, இன்று காலை தண்ணீர் குடிக்க வீட்டுக்கு வந்திருந்த வேளையில் வீட்டில் இரத்த வெள்ளத்துடன் தனது பாட்டி கிடந்ததை அவதானித்துக் கூச்சலிட்டுள்ளார்.

பின்னர் சம்பவ இடத்திற்குச் சென்ற அயலவர்கள் சம்பவத்தை அறிந்து லிந்துலை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதையடுத்து விரைந்த பொலி ஸார், வெட்டுக்காயங்களுடன் அந்தத் தாய் சடலமாகக் கிடந்ததைக் கண்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (02)

# வவுனியா வடக்கு எல்லை நிர்ணயம் முறைப்பாடுகள் இருப்பின் கூறலாம்

வவுனியா வடக்கு உள்ளூராட்சி மன்ற வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பில் மக்கள் கருத்துக்களை வழக்குமாறு வவுனியா வடக்கு பிரதேச சபை கோரியுள்ளது.

புதிய வட்டாரங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பாக எல்லை நிர்ணயக் குழுவின் வரைவு அறிக்கை வெளியாகியள்ளது. இது தொடர்பாக மக்களது கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை தேசிய எல்லை நிர்ணய குழு, அளவையாளர் நாயக அலுவலகக் கட்டடம், கிருளவீதி, கொழும்பு-05 என்னும் முகவரிக்கும் பிரதிகளை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், வவுனியா மற்றும் செயலாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி ஆகிய முகவரிகளுக் கும் ஏப்ரல் 27 கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு வவுனியா வடக்கு பிரதேச சபை செயலாளர் கோரியுள்ளார்.

எல்லை நிர்ணய வட்டார விவரங்களை வவுனியா வடக்கு பிரதேச சபை நெடுங்கேணி அலுவலகத்திலும், கனராயன் குளம் பகுதியில் உள்ள உப அலுவலகத்திலும், நெடுங்கேணி நூலகத்திலும், நைனாமடு உப அலுவலகத்திலும் பார்வையிட முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். 100

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால் வங்கிக் கட்டமைப்பு பாதிக்கப்படும்

## நாலக கொடஹேவாசுட்டிக்காட்டு



கடன் மறுசீரமைப்பில் தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும் அதனால் வங்கி வைப்பாளர்கள், முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

சர்வதேச நாணய நிதிய நிபந்தனையின் உண்மை தன்மையை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

நாவல பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைத்து விட்டது, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு விட்டோம் எனக் குறிப்பிட்டு அரசாங்கம் நாட்டு மக்களைத் தவறாக வழிநடத்துகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தின் உண்மை தன்மையை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண் டும்.

அரசமுறை கடன்களை மீள செலுத்த முடியாத நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வங்குரோத்து நிலை அடைந்து விட்டோம் என அறிவித்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் நான்கு ஆண்டு கால தவணை அடிப்படையில் 2.9 பி;ல்லியன் டொலர் கிடைப்பனவுக்கான சாத்தியம் கிடைத்தவுடன் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு விட்டோம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஐந்தாண்டு காலப் பகுதிகளில் மாத்திரம் 25 பில்லியன் டொலர் கடன் மீளச் செலுத்த வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எதிர்வரும் ஐந்து ஆண்டு காலப்பகுதிகளில் பிரதான நிலை கடன் வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய கடன்களை மறுசீரமைக்கும் விடயத்தில் சர்வதேச நாணய நிதியம் தலையிடாது.

கடன் மறுசீரமைப்புக்களை அரசாங்கம் தனித்து மேற்கொள்ள வேண்டும். 14 பில்லியன் டொலர் கடனை மறுசீரமைக்க பிரதான நிலை கடன் வழங்குநர்கள் இணக்கம் தெரிவிக்கமாட்டார்கள்.

கடன்மறுசீரமைப்புவிவகாரத்தில் சகல கடன் வழங்குநர்களும் சமமாக மதிக்கப்படுவார்கள், எவருக்கும் விசேடசலுகை வழங் கப்படமாட்டாது என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கைவங்கி, மக்கள்வங்கி ஆகிய அரச வங்கிகள் அரசாங்கத்துக்கு கடன்வழங்கியுள்ளன. தேசிய கடன் மறுசீரமைக்கப்பட் டால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும். இதனால் வங்கி வைப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்கு கடன் பெறுவது மாத்திரம் ஒரு தீர்வாக அமையாது. தேசிய வருமானத்தை அதிகரித்துக் கொள்ள பொது கொள்கைத் திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உறுதிப்பாட்டை முன்னிலைப்படுத்தி உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கடன் பெறுவதை காட்டிலும் மாற்றுத்திட்டங்கள் ஏதும் அரசாங்கத்திடம் இல்லை. அரச நிர்வாகத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எடுத்த தவறான தீர்மானங்களையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்கிறார். கடன் பெறுவது, அரச நிறுவனங்களை விற்பது, தேசிய வளங்களை விற்பது ஆகியவையே பொருளாதார மீட்சிக்கான அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளன. – என்றார்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் இலஞ்சம் பெற்றது யார்? பகிரங்கப்படுத்துக

### தர்ஷினி லஹந்தபுர நீதியமைச்சரிடம் கோரிக்கை



எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விவகாரத்தில் கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபைக்கும், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்பட்டன.

நட்டஈடு பெற்றுக்கொள்ளும் விவகாரத்தில் இலஞ்சம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஊடாக விசாரணைகளை மேற்கொண்டு நாட்டு மக்களுக்கு உண்மையை பகிரங்கப்படுத்துமாறு நீதியமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் என கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகாரசபையின் முன்னாள் தலைவர் தர்ஷினி லஹந்தபுர தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் தொடர்பில் தனியார் தொலைக்காட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நீர்கொழும்பை அண்மித்தகடற்பரப்பில் இரு தடவைகள் நங்கூரமிடப்பட்டுள்ள வெளிநாட்டு சரக்கு கப்பலில் இருந்து மஞ்சள் நிறத்தில் புகை வெளியேறுவதாக 2021.05.20 ஆம் திகதி மாலை 4 மணியளவில் கடல்வள பாதுகாப்பு அதிகாரசபைக்குதகவல் கிடைக்கப் பெற்றது. 2021.05.21 ஆம் திகதி காலை உரிய அதிகாரிகளுடன் கப்பலுக்கு அருகில் சென்றோம்.

நாட்டின் கடல் வளத்துக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டாம், விரைவாக கடல் எல்லையை விட்டு செல்லுங்கள் என 2021.05.21 ஆம் திகதி பகல் கப்பலின் கேப்டல், கப்பல் நிறுவனம் உட்பட நான்கு பிரதான தரப்பினருக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தோம். தீயணைப்பு பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கப்பல் நிறுவனம் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம்.

தீ பரவல் 2021.05.24 ஆம் திகதி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. 2021.05.25 ஆம் திகதி கப்பலில் மீண்டும் தீ பரவ ஆரம்பித்து, பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டன. கடல் எல்லையை விட்டுச் செல்லுமாறு பலமுறை வழங்கிய அறிவுறுத்தலை கப்பலின் உரிய தரப்பினர் கவனத்தில் கொள்ளவில்லை. கப்பல் முழுமையாக தீக்கிரையாகி ஜூன் மாதமளவில் கடலில் முழுமையாக மூழ்கியது. இந்த கப்பலில் 380 மெற்றிக் தொன் எண்ணெய் கடல் நீரில் கலக்காமல் இருப்பதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கப்பலில் சேமிக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் பரல்கள் நாடு முழுவதிலும் உள்ள பெரும்பாலான கடற்கரைகளில் கரையொதுங்கின. பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் கடல் வளங்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை எடுத்தோம்.

கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பில் உரிய தரப்பினருக்கு முறைப்பாடு செய்தோம், சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் உரிய ஆவணங்களை சமர்ப்பித்தோம். விபத்தால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை மதிப்பீடு செய்வதற்கு 40 துறை சார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவை நியமித்தோம்.

சிவில் வழக்குக்கு அமைய நட்டஈடு பெற்றுக் கொள்வதற்கு சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பில் ஆரம்பத்தில் அவதானம் செலுத்தவில்லை.

இலங்கையின் சட்டக்கட்டமைப்புக்குள் வழக்கு தாக்கல் செய்து நட்டஈடு பெற்றுக்கொள்ளவே எதிர்பார்த்தோம். கடந்த ஒகஸ்ட் மாதத்துக்கு பின்னரே சிங்கப்பூர் நாட்டில் வழக்குதாக்கல் செய்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விவகாரத்தில் கடல் வளங்கள் பாதுகாப்புஅதிகாரசபைக்கும், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்பட்டன.

பிளாஸ்டிக் பரல்களை அகற்றுவதற்கான பணிகளை மேற்கொள்வதற்கான செலவுகளை டொலரில் வழங்க கப்பலின் காப்புறுதி நிறுவனம் ஆரம்பத்தில் இணக்கம் தெரிவித்து, இரு தவணைகளை டொலரில் செலுத்தியது.

மூன்றாவது தவணையை ரூபாவில் செலுத்துவதாக சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக அறிவித்தது, அதற்கு நான் எதிர்ப்பு தெரிவித்தேன். இருப்பினும் எனது எதிர்ப்பு வெற்றி பெறவில்லை.

நட்டஈடு பெற்றுக்கொள்ளும் விவகாரத்தில் இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக தற்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஊடாக விசாரணைகளை முன்னெடுத்து நாட்டு மக்களுக்கு உண்மையைப்பகிரங்கப்படுத்துமாறு நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன். - என்றார்.

## எக்ஸ்பிரஸ் கப்பல் 6 பில்லியன் டொலர் நஷ்ட ஈடு: விசாரணை ஆணைக்குழுவை நியமிக்குக

### நளின் பண்டார வலியுறுத்தல்



நாட்டில் பாரிய கடற் பகுதிக்கும் ஏனைய சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்திய எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனத்திடமிருந்து நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ளும் விவகாரத்தில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழு மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு என்பன நியமிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக 6 பில்லியன் டொலர் நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு காணப்படுகிறது.

எனினும் இந்த விடயத்தில் மூன்றாம் தரப்பினர் ஊடாக மோசடிகள் இடம்பெற்றுள்ளனவாகக் கூறப்படுகிறது. நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்கக் கூடிய இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை சாதாரணமாக இழந்து விட முடியாது.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயம் தொடர்பில் நேரடியாக அவதானம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

அது மாத்திரமின்றி இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவொன்றையும் , நாடாளுமன்ற தெரிவுக்குழுவையும் அமைக்குமாறும் ஜனாதிபதியிடம் வலியுறுத்துகின்றோம்.

நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு இன்னும் 29 நாள்களே உள்ளன. எனவே இதற்கான சட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் முதலில் எமது நாட்டில் ஆரம்பிக்க வேண்டும். அவை வெற்றியளிக்காவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு சிங்கப்பூர் செல்லலாம்.

அதனை விடுத்து ஆரம்பத்திலேயே சிங்கபூரை நாடுவது பொறுத்தமற்றது. எவ்வாறிருப்பினும் இந்த விடயத்தில் மோசடிகள் இடம்பெறுவதற்கு அரசாங்கம் இடமளித்து விடக் கூடாது. – என்றார்.

## கல்வித்துறையை அத்தியாவசிய சேவையாக மாற்றுவதை என்றும் ஏற்றுக்கொள்ளமுடியாது

### பேராசிரியர் சம்மேளனத் தலைவர் ஷியாம் பன்னஹக்க கருத்து

கல்வித்துறையில் நிலவும் தொழில்சார் பிரச்சினைகளை தவிர்க்கும் வகையில கல்வித்துறையை அத்தியாவசிய சேவையாக மாற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பேராசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம் பன்னஹக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகளை தீர்க்க அதிகாரிகள் சாதகமாக செயல்படுவதே முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கல்வி அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, எதிர்வரும் வாரத்திற்குள் உயர்தர விடைத்தாள்களை ஆசிரியர்கள் சரிபார்க்காவிட்டால் அவசர சட்டத்தின் கீழ் கல்வியை அத்தியாவசிய சேவையாக மாற்றுவோம் எனத் தெரிவித்துள்ளார்.

கல்வித்துறையில் பாரிய பிரச்சினைகள் உள்ளன. அவை அனைத்தும் தீர்க்கப்பட்டு அத்தியாவசிய சேவையாக மாறினால் நன்றாக இருக்கும் என்பதே தங்களின் நிலைப்பாடாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வட மாகாண வெசாக் பண்டிகை இம்முறை வவுனியாவில் நடக்கும்



வடமாகாண வெசாக் பண்டிகை இம்முறை வவுனியாவில் இடம்பெறவுள்ளது. சித்தார்த்த கௌதமர் லும்பினி என்னுமிடத்தில் பிறந்த நாள், புத்தகயா எனும் இடத்தில் தவம் புரிந்து புத்த நிலை அடைந்த நாள் மற்றும் புத்தர் பரிநிர்வாணம் அடைந்த நாள் என்பவற்றை முன்னுறுத்தி வருடாந்தம் வெசாக் பண்டிகை பௌத்தர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில், மே 5, 6 இந்த வருடத்திற்கான வெசாக் பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள போதி தக் ஷினாராமய விகாரையில் இடம்பெற வுள்ளது. வடக்கு மாகாண ஆளுனர் மற்றும் மாகாணத்தின் உயர் மட்ட அதிகாரிகள் நிகழ்வீல் கலந்து கொள்ளவுள்ளனர். வெசகாக்கையொட்டி பல்வேறு நிகழ்வு களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (100)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதி எல்லோருக்கமானதாக இல்லாதபோது அது கிடைப்பதும் மிகத் துர்பலமே

உயிர்த்த ஞாயிறு படுகொலைகளுக்கு நீதி கேட்டு அதன் நான்காவது நினைவு நாளான இன்று கொழும்பில் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. கிறிஸ்தவர் மதத் தலைவர்களால் அழைப்பு விடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் பல இன, மதங்களைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டிருந்தனர். உயிர்த்த ஞாயிறு படுகொலைகளை நிகழ்த்தியவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனர். ஆனாலும் அந்தத் தாக்குதலை ஏன் தடுத்து நிறுத்தாமல் விட்டார்கள்? யாருடைய தேவைக்காக இந்தப் படுகொலைகள் திட்டமிடப்பட்டன? தாக்குதலைத் தடுக்கத் தவறியவர்களுக்கு ஏன் தண்டனை வழங்கப்படவில்லை? போன்ற கேள்விகளுக்கு விடைகளைத் தேடியே இந்த நீதிப் போராட்டம் நடத்தப்பட்டது.

கட்டுவாப்பிட்டியில் இருந்து நேற்றிரவு தீப்பந்தப் பேரணியாகப் புறப்பட்டவர்கள் இன்று காலையில் கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தை வந்தடைந்திருந்தார்கள். அதேபோன்று காலை 8 மணியளவில் கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தில் தொடங்கி மனிதச் சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது. ஒருவர் அருகில் ஒருவர் நின்று ஓர் மனிதச் சுவரை எழுப்பிய போராட்டக்காரர்கள் உயிர்த்த ஞாயிறு படுகொலைகளுக்கு நீதியைக் கோரி அமைதியாக நின்றிருந்தார்கள்.

அவர்களின் போராட்டம் முற்றிலும் நியாயமானது. இலங்கையில் மத ரீதியாக மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ள கிறிஸ்தவர்கள் இலக்கு வைக்கப்பட்டதன் பின்னால் இருக்கக்கூடிய உண்மைகளை வெளிக்கொண்டுவரவேண்டும் என்றும் அதற்குரிய பொறுப்பாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கோருவது நியாயமானது. கொல்லப்பட்டவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் நீதி வழங்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், இலங்கை போன்றதொரு நாட்டில் அத்தகைய நீதி சாத்தியமா? வழக்கப்படக்கூடியதா? என்கிற கேள்விகளுக்கு வரலாற்றில் இருந்து பதில் இல்லை என்பதுதான். இங்கு ஏற்கனவே இனங்களுக்கு எதிராக குறிப்பாகத் தமிழ் இனத்துக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலைக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் மனித குலத்திற்கெதிரான குற்றங்களுக்குமே நீதி கிடைக்கவில்லை. அதற்குப் பொறுப்பானவர்கள் கண்டறியப்பட்டு உண்மை வெளிப்படுத்தப்படவில்லை. கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாகத் தமிழர்கள் அந்த நீதியைக் கேட்டுப் போராடிக் கொண்டே இருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை வரையிலும் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீதி நிலைநாட்டப்படவில்லை. பொறுப்புக் கூறப்படவில்லை.

அப்படியிருக்கும்போது நான்கே ஆண்டுகளில் உயிர்த்த ஞாயிறு படுகொலைகளுக்கான நீதியை இந்த ஆட்சியாளர்கள் தந்துவிடுவார்கள் என்று எதிர்பார்ப்பது கானல் நீர்தான். இங்கே நீதி கேட்கும் அரசு அல்லாத எந்தத் தரப்பினருக்கும் அது கிடைப்பதில்லை. அப்படிக் கிடைக்காதபோது நான் அனைவரும் ஒன்றுபட்டு அந்த நீதிக்காகப் போராடியதில்லை. குறிப்பாக தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட குற்றங்களுக்கு நீதியைக் கேட்டுப் போராடியபோது கத்தோலிக்கத் திருச் சபைத் தலைமை அதற்கெதிராக இருந்தது வரலாறு. இன்று அதே தலைமை தமக்கான நீதியைக் கேட்டு நிற்கின்றது. இங்கு ஒரு நீதியை மறுத்து இன்னொரு நீதி வழங்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவானவையே. அனைவருக்கான நீதியையும் கேட்டுப் போராடும்போது மட்டுமே அது கிடைப்பதற்கான சாத்தியங்கள் சிறுதுளியளவாவது கிட்டக்கூடும்.

கத்தோலிக்க மதத் தலைமைகள் அதனை நன்கு சிந்தித்துச் செயற்படவேண்டும். தமிழர்களுக்கான நீதி மறுக்கப்பட்டபடி உயிர்த்த ஞாயிறு படுகொலைகளுக்கான நீதி கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்பு போலியானது. தமிழர், கத்தோலிக்கர்கள் என்றில்லை அநீதி இழைக்கப்பட்ட சிங்களவர்களுக்கும் கூட (லசந்த, எக்னொலிகொட போன்ற எத்தனையோ பேர்) நீதி கிடைக்க வேண்டியிருக்கிறது. அனைவருக்கமான நீதியைக் கேட்டு அனைவரும் ஒன்றிணைந்து போராடினால் மட்டுமே அதற்கான சாத்தியம் உருவாகக்கூடும். தனித் தனியான நகர்வுகளால் பயன்கிட்டும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

# பட்டிப்பளை பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சரும் எம்பியும் வாக்குவாதம்

(புழுவூரான்)



மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம் வியாழக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச அபிவிருத்தி குழுத் இணைத் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்

கடந்த காலங்களில் இப்பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.





இதன் ஆரம்பத்தில் அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக கட்சி சார்ந்து செயற்படுவதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோருக்கிடையே பெரும் வாக்குவாதங்கள் இடம் பெற்றதனைத் தொடர்ந்து அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஆரம்பமாகியது.

இவற்றில் குறிப்பாக படகுப் பாதை சேவைக்கு கட்டணம் அறவிடுவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகவும், அரச உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் கட்டணம் அறவிடவேண்டும் எனவும், தீர்மானம் எடுக்கப்பட்டது. தீர்மானத்தை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு மாவடி முன்மாரி பகுதிக்கான மயானத்திற்கான காணி ஒதுக்கீடு மற்றும் பட்டிப்பளைப் பிரதேச சபைக்கான திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான இட ஒதுக்கீடு தொடர்பாக பிரதேச சபை செயலாளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோதர்களுக்கு இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. அபிவிருத்திக் குழுத் தலைவரின் ஆலோசனைக்கமைவாக இரு தரப்பினரும் சுமுகமாகக் கலந்துரையாடி இவ்விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவினை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

மண்ணகழ்வு தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. பட்டிப்பளைப் பகுதியில் எதுவித மண் அகழ்வுக்கான அனுமதியும் வழங்கப்படவில்லை எனவும், வவுணதீவு பிரதேச செயலகப் பகுதியில் மண்ணகழ்வுக்கான அனுமதிப் பத்திரத்தினைப் பெற்று பட்டிப்பளை எல்லைப் பகுதியில் மண்ணகழ்வுகளை மேற்கொள்வதாக குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பட்டிப்பளைப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும், அவற்றினை நிவர்த்தி செய்து தரக் கோரியும், சில பாடசாலைக் கட்டிடங்களைப் புனரமைப்பு செய்து தரக் கோரியும், கோட்டக்கல்வி பணிப் பாளரினால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது. இதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுத்து தருவதாகவும், கட்டிடங்களைத் திருத்துவதற்கான வேலைகளைத் தனியார் நிறுவனங்களூடாக செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தனர்.

இவற்றோடு பட்டிப்பளைப் பிரதேசத்திலுள்ள சுனையன் குடாப் பகுதியில் இதுவரை அடிக்கட்டுப் பசளை வழங்கப்படவில்லை என விவசாயிகளினால் இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கேட்டு உடனடியாக உரிய அதிகாரிகளுடன் தொலைபேசி மூலம் ராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துரையாடி நாளைய தினத்திலிருந்து உரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார்.

அத்தோடு கடந்த காலங்களில் விவசாயச் செய்கைகளினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான காப்புறுதி வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளத்துடிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்!

கிளிநொச்சி மாவட்டம் வலைப்பாடு கிராமத்தில் பாசி வளர்ப்பு செய்கையின் மூலம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்றனர்.

சுமார் 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாசி வளர்ப்பு மற்றும் கூலிக்கு பாசி கட்டிக் கொடுத்து தமது குடும்பத்தின் வறுமையைப் போக்குகின்றார்கள்.

கணவனால் கைவிடப்பட்ட இந்த பெண்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலம் மற்றும் கல்விக்காக நாளொன்றுக்கு 10 மணித்தியாலங்கள் கடலில் காத்திருந்து, பாசியை கட்டி, அதை கடல் நீரில் ஊற வைத்து அதை காயவைத்து விற்பனை செய்கின்றார்கள்.

இவ்வாறு விற்பனை செய்யும் போது கிடைக்கும் பணத்தை வைத்து தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்கின்றார்கள்.

மரைன் அல்கோ என்ற நிறுவனம் பெண் தலைமைத்துவ குடும்பங்களை தெரிவு செய்து அவர்களுக்கு தேவை-யான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதுடன், காய வைத்து கொடுக்கும் பாசியையும் கொள்வனவு செய்கின்றார்கள்.

பாசி வளர்ப்பின் மூலமே, தாங்கள் ஒரு வேளை சாப்பாடு சாப்பிடுவதாக இந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தெரிவிக்கின்றனர். சுயதொழில் முயற்சிகளை பல்வேறு தரப்பினர்களும் முன்னெடுத்தாலும், கடலில் பாசி வளர்த்து அவற்றை காய வைத்து விற்பனை செய்வது சவாலான ஒரு தொழில்.

இந்த தொழிலை செய்யும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எதிர்காலம் சிறக்க, உள்நாட்டில் பாசி வளர்ப்பின் மகத்துவத்தையும் அதன் ஊடாக எவ்வாறான வருமானத்தை பெற முடியும் என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

# பலத்த காற்றுடன் வீசிய மழையால் வவுனியாவில் பெரும் பயிர் அழிவு





வவுனியா வடக்கில் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக 1500 இற்கு மேற்பட்ட பப்பாசி மரங்களும், பயன்தரு ஏனைய மரங்களும் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடும் வெப்பதற்கு மத்தியில் வவுனியா வடக்கில் வியாழக்கிழமை கடும் காற்றுடன் திடீரென மழை பெய்துள்ளது.

இதன்போது, வவுனியா வடக்கு ஓடைவெளி கிராமத்தில் வசிக்கும் விவசாயி ஒருவரின் தோட்டத்தில் காய்த்து அறுவடைக்கு சில வாரங்களே இருந்த 1500 பப்பாசி மரங்கள் காற்றில் முறிந்து விழுந்து அழிவடைந்துள்ளது.

அத்துடன், ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் உள்ள விவசாயிகள் பலரின் வாழ்வாதாரமாக இருந்த பப்பாசி, வாழை, புகையிலை, கத்தரி உள்ளிட்ட பயன்தரு மரங்களும் காற்றில் முறிந்து அழிவடைந்துள்ளன. தமது வாழ்வாதரமாக மேற்கொண்ட பயிர்கள் அழிவடைந்தமை காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். 100

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# இடியப்பச் சிக்கல்

**என் சத்திய மூர்த்தி**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா ஆகிய இருவரையும் மீண்டும் இணைக்கும் முயற்சியை பின்னவர் தடுத்துவிட்டார் என்று மலையகத்தில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார். அதே வீச்சில், அடுத்த காலத்தில் ஜனாதிபதி, அரசுக்கு ஆதரவு தருவது குறித்து அனைத்து கட்சியினருக்கும் பகிரங்க அழைப்பு விடுத்தால், அது குறித்து தனது கட்சி அப்போது முடிவு எடுக்கும் என்று சாரப்படும்படியும் பேசியுள்ளார்.

கடந்த ஜுலை மாதம் ஜனாதிபதி யாகப் பதவியேற்ற போதே, ரணில் மனோ கணேசனை ஆளும் தரப்பிற்கு வருமாறு கோரிக்கை விடுத்தார் என்று செய்திகள் வெளியாகி இருந்தன. அண்மையில், ஜனாதிபதியை மனோ மற்றும் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகிய இருவரும் சந்தித்த போதும் இந்த அழைப்பை ரணில் புதிப்பித்தார் என்றும் மனோ இப்போது கூறி உள்ளார். அதனை ரணில் தரப்பு, இதுவரை மறுக்கவில்லை.

இந்த பேச்சின் அடிப்படையிலேயே, ஹக்கீமும் தானும் ரணில்-சஜித் கட்சிகளை இணைப்பதற்கான முயற்சியைமேற்கொண்டனர்என்று மனோ தெரிவித்துள்ளார். அதனை சஜித் ஏற்றுக் கொள்ளவில்லை எனறும் அவர் தெரிவித்துள்ளார்.

அதாவது, அரசுடன் இணைய விரும்பும் மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம், சஜித்தை நம்பி அவர்கள் செயல்பட்டால், அது வேலைக்கு ஆகாது என்பதை, மனோ சூசகமாக, அதேசமயம் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்;.

என்றாலும், இது குறித்து ஜனாதிபதி ரணிலுடன் சேர்ந்து நாடாளுமன்றத்தில் கூட்டாக அழைப்புவிடுக்க இருப்பதாக வந்த செய்தியை மனோ மறுத்திருக்கிறார். அது உண்மையாகவே இருக்க வேண்டும். ஜனாதிபதியான ரணில், இதன் மூலம் ஒரு உதிரிக் கட்சித் தலைவரை தனக்கு சமமாக்கின் கொள்ளமாட்டார். அதுவும், மக்கள் சக்தியை மனதில் வைத்து விடும் அழைப்பை, சிறியதொரு கட்சியின் மூலம் முன் வைத்தால்;, அதன் முடிவு என்னவாக இருக்கும் என்பது அவருக்கு தெரியும்.

**அழைப்பு, உடைப்பு**

எதிர்வரும் செவ்வாய்கிழமை, ஏப்ரல் 25 சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் அரசதரப்பு சமர்பிக்க உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அப்போதோ, அல்லது அது குறித்த விவாதத்தின் முடிவிலோ, நிதி அமைச்சர் பொறுப்பையும் தன்னிடம் வைத்துள்ள ரணில், இதற்கான அழைப்பை அனைத்து தரப்பினர் முன்னர் வைப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ரணில், அப்போது முன் வைத்தால் அழைப்பு. இல்லை என்றால், உடைப்பு. குறிப்பாக, அவரது ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து சென்ற சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியை குறி வைத்தே அழைப்பும் விடப்படும். உடைப்பும் செயல்படும். ஆதரவு முடிவை சஜித்தையே எடுக்க வைப்பார். அல்லது, உடைப்புதான் தீர்வு என்றால், அதனையும் சஜித் கையில், அதாவது அவரது கட்சியில் இருக்கும் தலைவர்கள் கையில், குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையில் விட்டுவிடுவார்.

அந்த விதத்தில், நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்வது என்னவோ, ரணில் எடுத்த முடிவு மட்டும் இல்லை. எதிர்வரும் காலங்களில் புதிய ஆட்சிகளையும் இந்தக் கடன் திட்டமும் அதில் அடங்கியுள்ள நிபந்தனைகளும் கட்டுப்படுத்தும். எனவே, இது குறித்து நாட்டு மக்கள் அறிந்திருக்கவேண்டும். அதிலும் குறிப்பாக, நாட்டில் உள்ள அரசியல் தலைமைகள் அதற்கு ஆதரவு தெரிவித்து, தேசிய அளவில் ஒருமித்த கருத்து உருவாக்கவேண்டும. இவை எல்லாம், நிதியத்தின் சொல்லப்படாத நிபந்தனைகளாகவேகூட இருக்கலாம்.

கடந்த காலங்களில் நிதியத்திடம் உதவி வாங்கிய அரசோ, அல்லது அடுத்தடுத்து பதவிக்கு வந்த தலைமைகளோ, இந்த நிபந்தனைகளைக் கண்டுகொள்ளாமல், தங்கள் விருப்பத்திற்கேற்ப அரச செலவினங்களை அதிகப்படுத்தியதால்தான் தற்போதைய பொருளாதார வீழ்ச்சியை நாடு சந்திக்க வேண்டி உள்ளது என்ற கருத்து பரவலாக உள்ளது.

இதனையே நிதியமும், அதன் மூலம் இலங்கைக்கு பொருளாதார உதவி வழங்க ஆதரவு அளிக்கும் நாடுகளும்கூட கருதுகின்றன.

**மஹிந்தாவிற்கு செக்?**

அனைத்து கட்சி அரசு, அல்லது அனைத்து கட்சி ஆதரவுள்ள அரசு என்ற நிலைமை தோன்றினால் மட்டுமே, ரணில் தனது ஆட்சிக்கு ஆதரவளித்து ஒரு விதத்தில் தன்னைக் கட்டுபாட்டில் வைத்திருக்கும் மஹிந்த ராஜபக்சவகையறாக்களுக்கு செக் வைக்க முடியும். அது அரசியல் ரீதியான அவசியமும்கூட.

எப்போது, ராஜபக்சாக்களுக்கு மக்கள் ஆதரவு நாலு சதவீதமாகவே உள்ளது என்று கருத்து கணிப்புகள் கூறுகின்றனவோ, அவர்களை நம்பித்தான் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலை சந்திப்பது முட்டாள் தனம் என்பதை ரணில் உணர்வார். அவர்களது ஆதரவை நம்பி இருப்பதினால் மட்டுமே தனது செல்வாக்கும் நான்கிற்கும் குறைவான சதவீதங்களில் இருக்கிறது என்று அவர் கணக்கிட்டால், அவரைக் குற்றம் சொல்ல முடியாது.

என்றாலும், ஜனாதிபதி தேர்தல் வரையிலாவது தனது ஆட்சி தொடர வேண்டுமென்றால், மஹிந்தவின் மொட்டுக் கட்சியை விட்டால் நாடாளுமன்றத்தில் அவருக்கு வேறு வழி இல்லை. அதற்காகவே, அனைத்துக் கட்சி அரசு என்று, மக்கள் சக்தியை மட்டுமல்ல, அதன் கூட்டணி அங்கத்துவ கட்சிகளையும் உள்வாங்கி கொள்வது அவருக்கு அரசியல் மற்றும் தேர்தல் கால அவசியம். காரணம், அவர்கள் சார்ந்த சிறுபான்மையினரின் வாக்கு வங்கிகளும் அவருக்குத் தேவை.

தற்போது, ரணிலுக்கு ஆதரவாக மொட்டு கட்சி அமைச்சர்களான காஞ்சன விஜயசேகர மற்றும் பிரசன்ன ரணதுங்க போன்றோர் செயல்படுவதாக கருத இடமிருக்கிறது. இவர்களுடன் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சா போன்றோரும் இணைய வாய்ப்பு இருக்கிறது. மொட்டு எம்.பிக்கள். தொடர்ந்து ராஜபக்சக்களுடன் தம்மை



கட்சியினர் வந்து விட்டனர். அதிலும் குறிப்பாக,

அது மட்டும் இல்லாமல், 2015 முதல் ஐந்து ஆண்டுகள் முழுமைக்கும்கூட தொடர்ந்து அமைச்சர் பதவி வகிக்க முடியாத சஜித் கட்சி தலைவர்கள் சிலருக்கு பதவி ஆசை மீண்டும் விட்டுள்ளது. முந்தைய மஹிந்த ஆட்சியிலும் அமைச்சர் பதவி வகித்து, அவரின் முதுகில் குத்திவிட்டு, அணி மாறிய ராஜித சேனரத்னா போன்றோரால், அமைச்சர் பதவி இல்லாமல் காலம் ஓட்டுவது சரியான இம்சையாகவே மாறிவிட்டது. எனவேதான், அவர்கள் தொடர்ந்து அனைத்துக் கட்சி அமைச்சு என்ற வகையில் பேசி வருகிறாஜ¬கள்.

ரணிலுக்கு மட்டும் என்ன? மக்கள் சக்தியின் ஹர் டிசில்வாவை மனதில் வைத்தே தன்னிடம் தக்க வைத்துக் கொண்டுள்ள நிதி அமைச்சர் பதவியை அடுத்த மாதங்களில் கைவிட்டு விடுவது அரசியல் தேவை. விலைவாசி உயர்வு, பணவீக்கம் ஆகிய பிரச்சினைகள் தொடரும்போது, அதற்கு மக்களின் பழிச் சொல்லுக்கு அவரே ஆளானால், அவரால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாது.

மாறாக, அத்தகைய சூழலில், தன்னை அரசிற்கும் அரசியலுக்கும் அப்பால்பட்ட ராஜதந்திரியாய் காட்டிக்கொண்டு, ஹர்ஜ¬ போன்றோர் முன்னெடுக்கும் முடிவுகளுக்கு முட்டுகட்டை போடுவது போல்நடித்து, மக்கள் ஆதரவை பெறுவதே அவரது அரசியல் தந்திரமாக இருக்க வேண்டும். அதற்கு அவருக்கு ஒரு சில பலிகடாக்கள் வேண்டும்.

**அரசியல் கட்டாயம்**

ரணிலை பொறுத்தவரை, அனைத்து கட்சி அரசு என்பது, காலத்தின் கட்டாயம் என்பதற்கு அப்பால், அரசியல் கட்டாயமும்கூட. தற்போதைய பொருளாதார சூழலில், இழந்துபட்ட தனது நற்பெயரை ஓரளவிற்கேனும் அவர் தேற்றி வைத்துக்கொண்டுள்ளார். அதிலும் குறிப்பாக நகரப் பகுதிகளில் அவரை விட்டால் தற்போதைய இக்கட்டான பொருளாதார சூழலில், நாட்டை வழி நடத்திச் செல்ல வேறு யாரும் இல்லை என்ற எண்ணம் உருவாகி வருகிறது.

இதன் காரணமாகவும், அவரது அரசின் புதிய தீவிரவாதத் தடைச் சட்டம் மற்றும் மின் கட்டண உயர்வு ஆகியவை குறித்து எதிர்கட்சிகளின் விமர்சனங்களுக்கும் போராட்டங்களுக்கும் தலைநகர் கொழும்பில் அதிக அளவில் ஆதரவு இல்லை என்ற நிலைமை உள்ளது.

நிலைமையின் உண்மைத் தன்மையை அறிந்து கொண்டதால்தான், சஜித் தலைமையும் தனியாக எந்தவொரு போராட்டத்தையும் முன்னெடுக்கவில்லையோ என்றும் தோன்றுகிறது.

அடையாளப்படுத்திக் கொள்வதைத் தமது தற்கொலைக்குச் சமமாகப் பார்க்கிறார்கள் என்ற கருத்தும் நிலவுகிறது.

**எது மக்கள் சக்தி?**

இது இப்படி என்றால், சஜித் தலைமையிலான மக்கள் சக்தி விவகாரம் வேறு மாதிரி. சரியோ தவறோ, முன்பு ரணிலை போல், தற்போது, சஜித் பிரேமதாசாவினால், ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற முடியாது என்ற எண்ணம் அவரது கட்சியிலேயே பரவி விட்டது. ஏன், எதிர்கட்சி தலைவராகக்கூட அவர் கண்ணை கட்டி, காட்டில் விடப்பட்ட குழந்தை போல் செயல்படுகிறார்.

தற்போதைய சூழலில், பிற கட்சிகளின் ஆதரவு இருந்தோ, இல்லாமலோ. ஜனாதிபதி தேர்தலில், ரணில் முன்னிலை வகிப்பார் என்ற எண்ணமும் உருவெடுத்து வருகிறது. தேர்தல் போட்டியே ரணில் மற்றும் ஜேவிபி வேட்பாளருக்கு இடையேதான், மக்கள் சக்தி மூன்றாவது இடத்திற்கே வரும் என்பன போன்ற அரசியல் கணக்குகள் இப்போதே ஒரு சுற்று வந்துவிட்டது. அதாவது, சஜித்தை நம்பி அரசியல் செய்தால் அதோ கதி என்ற நிலைமைக்கு அவரது

> **கடந்த ஜுலை மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற போதே, ரணில் மனோ கணேசனை ஆளும் தரப்பிற்கு வருமாறு கோரிக்கை விடுத்தார் என்று செய்திகள் வெளியாகி இருந்தன. அண்மையில், ஜனாதிபதியை மனோ மற்றும் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகிய இருவரும் சந்தித்த போதும் இந்த அழைப்பை ரணில் புதிப்பித்தார் என்றும் மனோ இப்போது கூறி உள்ளார். அதனை ரணில் தரப்பு, இதுவரை மறுக்கவில்லை.**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.04.2023 இல் வெளியிடப்பெற்றது.